நாடார் குல மித்திரன்.

1927 வரு ஜூலை மீ 25உ

# கோவை மகாநாட்டில்

## ஸ்ரீமான் எஸ். குமாரஸ்வாமி ரெட்டியாரவர்களின் தலைமைப் பேருரை.

[சென்ற வாரத்தின் தொடர்பு]

அடித்தாற்போல் கூடிய காங்கிரஸில் மலபார் மந்திரிமார் கூடவே கூடாதென்று நமது பார்ப்பனச் "சிங்கங்கள்" கர்ச்சித்தன. அக்காலத்தில் நமது சுயேச்சை மந்திரிமார் உத்தியோகத்தில் நன்றாய் அமர்ந்துவிட்டார்கள். சென்னையிலுள்ள அரசியற்காரியங்கள் மாத்திரம் மற்றப் பிரதேசங்களுக்கு மாறுபட்டனவே. ஆனதால் மந்திரிமாரை ஆதரிக்காமலிருப்பதெப்படி என்ற அழுகையை அப்பொழுது அழவில்லை. காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. ரெங்கசாமி ஐயங்கார் பேசினதென்னவென்றால்:— "காங்கிரஸ்காரர் மந்திரிமாரோ தங்கள் கட்சியிலிருந்து ஏற்படுத்தக்கூடாதுதான். ஆனால், இதர கட்சி மந்திரிகளையும் எதிர்க்க வேண்டுமென்ற விதி மிகவும் அவசியம். இல்லையானால் ஒரு மலபார் மந்திரி கூட்டத்தை ஸ்தாபிக்கலாம் என்றல்லவா ஏற்படும்? இச்சமாற்றத்தான் காங்கிரஸ்காரர்களானோர் நாம செய்யக்கூடாது." என்பது.

காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் பிரம்மஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் அச்சமயம் என்ன சொன்னார் என்றால்:— "எந்தக் கருக்க பதவி ஏதேனுமிருந்தால் காங்கிரஸ் கட்சியார், அவைகளை ஏற்பதற்கு மலபாரை ஆதரிகளைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள்" என்பது. இவ்வளவெல்லாம் வேதாந்தம் பேசிய இப்பார்ப்பன உத்தமரின் ஆதரவின் மேல்தான் உடுக்கான ஓர் மந்திரிக்கூட்டம் ஆட்சிபுரிந்து வருகிறது. சுயராஜ்யப் பார்ப்பனர் இட்ட விலங்கில் அகப்பட்டுக்கொண்ட மந்திரிகளின் திண்டாட்டத்தைப் பாருங்கள்.

சுயராஜ்யக் கட்சியார் ஜனங்களை வஞ்சித்த மோசடியே கொடியது. அதனினும் கொடிதே அவர்கள் நெருக்கடித்த பொய்ச் சமாதானங்கள். சட்டசபையிலுள்ள சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர் வீராவேசம் கொண்ட ஒரு சேனைபோல் வீரமுழக்கம் செய்துகொண்டு போர் முனையை நோக்கிச் சென்றார். போர் ஆரம்பிக்கும் தருணம் கண்டு "உருவின வாளை உறையில் போடு" என்று கட்டளை வந்துவிட்டது. கருணையோடு பதுத்தாய் பதுங்கிக் கொண்டார். இன்னும் தருணம் வாய்த்தபின் உறையிலிட்ட கத்தியைத் திரும்ப உருவுவார்களாம். இதுதான் சுயராஜ்யக் கட்சியாருடைய வீரம்! அவர்கள் புறங்காட்டி ஓடினதற்கு அவர்களின் சேனைத் தலைவர் கூறும் கோழைச்சமாதானத்தை அவர்கள் வாயலாலேயே கேளுங்கள். "காங்கிரஸின் விதிப்படி நடக்கவேண்டியது நம்முடைய கடமைதான். ஆனால், சுயராஜ்யத்தை அடைவதில் ஜஸ்டிஸ் கட்சியிக்க இடையூறு செய்தாரான என்பதை ஒப்புக்கொண்டதே. ஆகையால், காங்கிரஸ் விதிக்கு மாறுகாத விதத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டியதாம் நமது கடமைதான்," என்றார். இதன் பொருள் குறித்த அத்தலைவர்க்கே வெளிச்சம்.

தோத்தார் விதித்த விதியென்று சொல்லுகிற சொல்லெல்லாம் வெறும் ஆசாரவர்த்தகம். இதெல்லாம் இச்சுற்றுத் திண்டாடும் திருட்டு முழி அல்லாமல் வேறல்ல. இவர்களிடத்து அரசியல் காணயம் இதற்கு முன் ஏதோ இருந்ததும் ஒழிந்ததே! இவர்கள் தேர்தலுக்கு முன்னும் பின்னும் கூறியவைகளெல்லாம் தொலைந்ததே! அவர்களுடைய தலைவர் சொல்லியதைக் கேளுங்கள். "ஜனங்கள் சுயராஜ்யக்கட்சியினரை அதிகமாய்த் தெரிந்தெடுத்தது ஜஸ்டிஸ் கட்சியின் மேலுள்ள விரோதம் பற்றியல்ல. காங்கிரஸின் மேல்வைத்த அன்பு பற்றித்தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது பேசுதல் அரசியல் வாதிகளுக்கு நல்லதும் இல்லைபோலும். அற்ப ஆண்மார்களுக்கே அது ஒரு அறம்போலும். இவ் வீரர்க்கு அது அறமல்ல. சத்தியம் அரசியல் வாதிகளுக்குள் இன்னும் ஒரு அறந்தானே? தேர்தல் பிரதிநிதிகளைக் காப்பாற்றுவது சத்தியமல்லவா?

அரசியல் உலகத்தைவிட்டு ஓட்ட வேண்டிய பேய்களை ஜஸ்டிஸ் கட்சியார்? அவர்களை ஓட்டிவிட வேண்டும் என்று காட்டர் விதித்ததுண்டா? அச்சப்பேயோட்டும் பணிதர்கள் இவர்களோ? மாற்றான் படைகள் பலமாய்ச் சால்கியும் கூட ஆறு வருடம் ஒரு கட்சி நிலை நிற்குமானால் இவர்களுக்குத் தெரியாத ஓர் தந்திரம் ஒன்று அதனிடத்தில் அமைந்து கிடக்கின்றது என்று சொல்லவேண்டுமோ? இத்தப்போலித் தேசபக்தர்கள் பின்பற்றிவருகிற கொள்கைகளைவிட ஜஸ்டிஸ் கட்சியாருடைய கொள்கைகளையே ஜனசமூகம் இன்னும் ஆதரிக்கின்றது. ஜஸ்டிஸ் மந்திரிகள் செய்துள்ள வேலை இந்த தேசத்தில் வேறு எந்த மந்திரிகள் செய்த வேலைகளிலும் சிறந்தது. அவர்கள்தான் ஐரோப்பியர்கள் இருந்த உத்தியோகப் பதவிகளில் வேறு எவ்விடத்திலும் இல்லாதபடி இந்தியர்களை நியமித்தார்கள். இதுதான் உண்மையான தேசீயத்தொண்டு. தேசிய முன்னேற்றத்துக்கு ஜாதி சமத்வம் அடிப்படையென்ற கொள்கையினால் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கும் வகுப்புவாரி நியாயத்திற்கும் அவர்கள் கட்டுப்பட்டிருக்கின்றார்கள். இதுபற்றியே ஜஸ்டிஸ் கட்சியாரை தேசத்துரோகிகள் என்றும் பிசாசுகள் என்றும் பலவாறாக வசவுமழை பொழிகிறார்கள்.

இந்த இனப்பேய் பிடித்த அகம்பாவ குடுக்கைகளோடு உறவாடுகின்ற பார்ப்பனரல்லாதார் என்று கண் விழித்து உண்மையைக் காணப்போகிறார்களோ! வஞ்சிக்கும் இன் சொற்கள் உற்பத்தி செய்வதில் பார்ப்பனரைப்போல் சமர்த்தர் யாருமேயில்லை. சும்மா அவைகளைக் கேட்டு மயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாதாருடைய நன்மையைக் கோருவதால் ஜஸ்டிஸ் கட்சியார் தேசத்துரோகிகளாய் விட்டார்கள். அப்படியானால் மற்ற கட்சியிலுள்ள பார்ப்பனரல்லாதாரைப்பற்றி என்ன சொல்லுவார்கள்? சென்ற சட்டசபைக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சியல்லாத மற்ற கட்சியிலுள்ள பார்ப்பனரல்லாத அங்கத்தினர் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று முப்பதுக்கு மேற்பட்ட பிரேரணைகளைக் கொண்டுவந்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் ஒன்றுமே கொண்டு வரவில்லை. இனப்பேய் பிடித்தவர்கள் என்று நம்மைச் சொல்லுகிறார்கள். அது நாமோ? அல்லது அவர்கள் கூட்டாளிகளான பார்ப்பனரல்லாதவரா? இப்போது என்ன சொல்லுவார்கள். இக்களமாற்றமெல்லாம் எத்தனை காலம் கொண்டு செல்லும்? பிராமணரல்லாதார் தங்களைப் பிடிக்க வீசப்படும் வலையைக்கண்டு கொள்ளும் வரையுந்தான். காங்கிரசைச் சேர்ந்த பார்ப்பனத் தலைவர்கள்தான் அதி உக்கிரமான இனப்பேய் பிடித்துத் திரிகிறவர்கள் என்று சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த அதிதீவிரர்கள் பலர் இப்போது கண்டுவிட்டார்கள்.

"சென்னைக் காங்கிரஸ் கட்சியார் அரசியல் பதவிகளையும் உத்தியோக பதவிகளையும் ஒரு இனத்துக்கே ஆக்கி அதை நிலைபெறச் செய்வதற்காகவே ஒரு கருவியாகத் தங்களை அமைத்துக்கொண்டார்கள் என்று பனகால் ராஜா சொல்வது உண்மைதான்." என்று வட இந்தியாவிலுள்ள ஒரு காங்கிரஸ் பத்திரிகையே சொல்ல ஆரம்பித்துவிட்டது. மேலும் சென்னை மாகாணத்தின் பொதுஜனக் கருணையைப் பார்ப்பனரல்லாத மந்திரிகள் கெடுத்துவிட்டார்கள் என்று பார்ப்பனர் சொல்வது முற்றிலும் பொய் என்றும் அப்பத்திரிகை கூறுகின்றது. பார்ப்பனர் சொல்லில் இன்னும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிற நம்மவர் ஒரு வங்காள பத்திரிகை கண்டுகொண்ட உண்மையைக் கூடக் காண முடியவில்லையா?

இன்னொரு முறை ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திற்கு வந்து விடுவார்கள் என்ற பயபீதியால் தான் தங்கள் ஒழுக்கத்தைக் கைவிட நேர்ந்தது? பால் காங்கிரஸ் கட்சியார் செய்வதெல்லாம் மொண்டிச் சமாதானமே. இந்தச் சட்டத்தை உண்டவரை உத்தியோக பதவியை ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்ற கட்சியின் தலைவர்கள் பத்திரிகை மூலமாகவும் பிரசங்க மேடைகளிலிருந்தும் சட்டசபை அரங்கத்திலேயும் வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த அரிச்சந்திரர்கள் சும்மா நம்பமாட்டார்களாம். அதிலென்ன புதுமை? அவர்கள் தங்களைக்கொண்டு தானே பிறரைக் கணிக்கக்கூடும்? தேர்தல் பிரதிநிதிகளை மானாவமானம் சிறிதுமின்றி கைவிட்ட இவர்கள் மற்றவர்கள் வேறு விதமாய் நடப்பார்கள் என்றேன் எண்ணவேண்டும்?

சுயராஜ்யக்கட்சியில் சிலர் இச்சப்பெய் பருகுகளுக்கு ஆளாகவில்லை. யோக்கியதை நாடி இன்னும் அவர்கள் உள்ளத்தில் பேசிக் கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த மோசடிகளையெல்லாம் கண்ணுற்று சன்னியமொன்றையே கருதி கடந்துவரும் தங்கள் தலைவர்களின் சூழ்ச்சியின் கொடுமையை எல்லாம் பொறுக்க முடியாமல் கிளம்பிவிட்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னும்போய் முறையிட்டார்கள். ஆனால், என்ன பயனாயிற்று? குற்றவாளிகள் தப்பிப்போவதாக விசாரணையை அடக்கி அவர்களை தண்டிப்பதற்குப் பதிலாக ஆசீர்வதித்துவிட்டு விட்ட மானங்கெட்ட செயலெல்லாம் தெருவில் கோலி விளையாடுகிற பையனுக்குக் கூடத்தெரியும். சென்னையில் கோடைகாலத்திற்கு கூத்து ஒன்றுமில்லை. ஆகையால், மயிலாப்பூரின் உள்ள மகாத்மாக்களின் அற்புதக் கூத்துகள் புதுப்புதுக் காட்சியாகக் காட்டப்பட்டு வருகின்றன. இப்போது இதுதான் சென்னைக்கு வாய்த்த கண்காட்சி. ஒரு சிறந்த சர்க்கஸ் மாஸ்டராய் (தலைவராய்) வருகிறார். மந்திரிகளாகிய ஆட்டுக்குட்டிகளை மூக்கணாங் போட்டுப் பிடித்துக்கொண்டிருக்கிறார். தன் மந்திர சக்தியால் வசப்படுத்தி சுயராஜ்யச் சிங்கங்களை அவைகளுக்குத் தோழராக்கி திக்கச் செய்கிறார். இரு திறத்தார்க்கும் நன்மை உண்டோ என்று; லாபந்தான் மிகுதியாகிய கவலை ஏதேனும் உண்டா? இல்லை. சென்னையிலுள்ள பேர்போன ஒரு சுயராஜ்யக் கட்சி பிரமுகர்தான் இந்த உண்மையை வெளியிட்டார். வேறொரு பேர்போன சுயராஜ்ய காங்கிரஸ்காரர் இன்னுமோர் புதுமை சொன்னார். அது என்னவெனில் 'சுயேச்சை கட்சியாருக்கு பதவியும் சுயராஜ்யக் கட்சியாருக்கு வருவாயும் அதிகாரமுமே இந்நாட்டின் அரசியல் முறை' என்று சொன்னது.

சுயராஜ்ய வீரர்கள் மாதிரி அபூர்வ மனிதரை நாம் எங்குமே கண்டதில்லை. கேவலம் என்னவந்தாலும் சரி, அவமானம் எவ்வளவு அடைந்தாலும் சரி, இவர்கள் புட்டுமென் எல்லாம் [illegible] சாக்கடைச் சேறு போல [illegible] மேலெல்லாம் வழிந்து [illegible] டிருந்தாலும் சரி, அவர்கள் [illegible] பொருட்படுத்தாது மானங்கெட்ட [illegible] கலையை இன்னும் உயர்த்திக் [illegible] தங்களுடைய ஜனக்குரலில் [illegible] யதார்த்தவாதிகள்; வயிற்றுப் [illegible] மானத்தை விற்றுவிடவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய கூட்டாளிகளின் பதிலே இந்த வலை பிடுவதை ஒய்க்கட்டும்.

### சுயராஜ்யப் பிடாரியை வசக்கியகதை.

சுயராஜ்யக் கட்சியாருடைய நிச் செயல்களெல்லாம் அவர்கள் கொள்கைகளுக்கு ஏற்பட்டிருக்கும் மரண அவஸ்தையின் அறிகுறியே. உள்ளிருக்கு முட்டுக்கட்டை போட்டு தேசீயத் தொண்டு புரிவோமென்று சட்டசபைக்குள் புகுந்த வைத்தியக் கொள்கைகளுக்கு முடிவுகாலம் வந்துவிட்டது. அவர்களுக்கு அறிவு வந்து நாம் கடைப்பிடித்துள்ள கொள்கைகளை அங்கீகரித்து பின்பற்றி நடக்கும் காலம் வரப்போகிறது. வந்தபின்தான் அயோக்கியத்தனம் சற்று ஒழியும். இப்பொழுது அயோக்கியதையே உருவெடுத்து வந்தாற்போல் இருக்கின்றார்கள். உதாரணங்கள் பாருங்கள். இருதலை நாட்டுக்குப் பகையாளிகள் என்று வெளியாகக் கூறிக்கொண்டு அதிகாரத்திலும் அரசோடு ஒத்து இணங்கி உருவமில்லாததும் உவாத்தலமில்லாததுமான ஒரு மந்திரிவர்க்கத்தை ஏன் உண்டு பண்ண வேண்டும்? இது இவர்கள் உற்பத்தி என்று உலகெங்கும் தெரியுமே.

நாட்டில் தலைநகரத்தின் தாரியிருந்து ஒன்றும் கையேற்று வாங்கமாட்டோம் என்று வீரம் பேசிக்கொண்டு தற்ப நியமனங்களுக்கும் ஏன் மண்டி போட்டு யாசிக்க வேண்டும்? மந்திரிகள் வீட்டு வாசலில் இரவுபகலாய்க் காத்திருந்து நியமனங்களை யாசித்தார் என்னும் மானத்தையெல்லாம் ஒரு சவலைச்சோற்றுக்கு விற்றுவிட்டார்களென்றும், ஆந்திர தேசத்து சுயராஜ்யத் தலைவர் தன் கூட்டாளிகளைப்பற்றி வெட்கப்பட்டுக் கூறவில்லையா? தன்மையேயில்லாத சுயராஜ்ய தேசாபிமானிகள், அடடா! நீலகிரியிலுள்ள (இருப்பதி போன்ற) அரசியல் க்ஷேத்திரத்துக்குப் போகிற யாத்திரைகள்தான் எத்தனை! அங்கு எழுந்தருளியிருக்கும் தேவதைகளுக்குச் செய்கிற ஆராதனைகள்தான் எத்தனை! அவர்களிடம் பிரார்த்திக்கிறவர்கள் தான் எத்தனை! சீர்ப்பாய்ச்சல் மகோதா கமிட்டி அங்கத்தினராக "நாட்களை அதிகரிக்கனால்" தேர்ந்தெடுக்கப்பட்ட போது சுயராஜ்யத் தலைவர்கள் கிடையாத சவப்பேறு கிடைத்ததுபோல் ஓடிய ஓட்டந்தானென்ன!

உள்ளொன்றும் புறமொன்றுமுள்ள இந்த அயோக்கியதை எல்லாம் ஒழியட்டும். அவர்களுடைய முட்டுக்கட்டை போடும் கொள்கை யெல்லாம் பொய்த்துப் போய்விட்டதென்று ஒப்புக்கொண்டு பொய்யான ஆரவாரக் கூக்குரல்களையெல்லாம் விட்டொழித்து உண்மையைப் பேச ஏன் முன்வரலாகாது? அவர்கள் வலியறிருக்கும்போது பேடியின் கோலம் போல் தீச்சுவையை வாரிவாரித் தின்று இல்லாததுபோல் ஊர் ஊர் என்று கதறுகிறார்கள். இப்போது அவர்களுக்கு கொஞ்சம் பலம் வந்திருக்கும் இக்காலத்தாவது அவர்களுடைய கோபாவேசம் நெருப்பையெல்லாம் இக்குட்புகை அடுப்பிற்கு ஆக்கிச் சொன்ன வேண்டாமா? நான் முதன் முதலில் ஒன்றைச் செய்து அதில் பலனையும் வைத்து விட்டானே. இதனாலும் தேச பக்தியோடு உழைத்தற்குக் கைம்மாறாக மூன்று வருஷங்களுக்காவது உத்தியோக பதவி வேண்டாமா?

அவர்கள் யதார்த்த வாதிகளானால் உத்தியோக பதவியை ஒப்புக்கொள்ளலாமென்று ஒளிக்காமல் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டும். இதைப் புதிய கொள்கை/மாறு தங்களுடைய [illegible] களையெல்லாம் அகற்றிவிட்டு மீண்டும் நாட்டில் பேரபிமானம் [illegible] கேடும் களைந்து உண்மை உருவோடு [illegible] த்திருக்கும் பழைய சிநேகிதர்களோ [illegible] என்று சொல்லவேண்டும். நாட்டுடைய வாக்குரிமையைப் பெற்ற

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# 11-வது மகாநாடு.

## உபசரணைக் கமிட்டி அறிக்கை.

நாடார் மகாஜன சங்கம் 11-வது கான்பரன்ஸ் உபசரணைக் கமிட்டியார் 16—7—27 மாலை 5 மணிக்குக் கூடிய மீட்டிங்கில் தீர்மானித்த விஷய விபரங்கள்.

### கமிட்டி.

பிரஸிடெண்டு.

1. ஸ்ரீமான் சி. வெ. ரத்தினசாமி நாடார் அவர்கள்.

வைஸ் பிரஸிடெண்டுகள்.

ஸ்ரீமான்களான சு. மூ. ச. மாரிமுத்து நாடார், அன. ம. கருப்பண்ணசாமி நாடார், செ. தங்கவேல் நாடார், க. பெரியசாமி நாடார், சே. பெருமாள் நாடார்.

ஜெனரல் செக்ரட்டேரி.

ஸ்ரீமான் வி. சுடலைமுத்து நாடார் அவர்கள்.

உதவி செக்ரட்டேரிகள்.

ஸ்ரீமான்களான சு. நடேச நாடார், வை. ஆறுமுக நாடார், செ. பெரியசாமி நாடார், சி. ராமச்சந்திர நாடார், தா. மூ. பெருமாள் நாடார்.

பொக்கிஷதார்.

ஸ்ரீமான் அ. சாமிநாத நாடார் அவர்கள்.

மெம்பர்கள்.

ஸ்ரீமான்களான ப. ரகுநாத நாடார், ஆ. சு. விநாயகமூர்த்தி நாடார், மா. சு. மாரிமுத்து நாடார், வ. சின்னைய நாடார், மா. தங்கண நாடார், மா. ராமசாமி நாடார், சு. சாமிநாத நாடார், பெ. வெங்கிடாசல நாடார், ஆ. சங்கலிங்க நாடார், க. முருக நாடார், சி சு. கோவிந்தசாமிநாடார், இ. சே. கோவிந்த நாடார், தே. சி. சாமிநாத நாடார், க. கோ. பொன்னுச்சாமி நாடார், கோ. க. ராமசாமி நாடார். எஸ். மாசிலாமணி போதகர், மு. சிதம்பரநாடார், நூ. அரசகுமார் நாடார்.

2. 11-வது கான்பரன்ஸ் முதல் நாள் கௌரவ அக்கிராசனாதிபதியாக ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களை ஏக மனதுடன் தெரிந்தெடுக்கப்பட்டது.

3. கான்பரன்ஸ் 1927 ஹூ அக்டோபர் மீ 1, 2, 3 உ களில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

4. கமிட்டி பிரசிடெண்டு ஸ்ரீமான் ரத்தினசாமி நாடார், காரியதரிசி ஸ்ரீமான் வி. சுடலைமுத்து நாடார் ஆகிய 2 பேர்களும் 18—7—27 ல் மதுரை போய் கான்பரன்ஸ் சம்பந்தப்பட்ட முக்கிய காரியங்களைச் சங்க நிர்வாகிகளிடம் கலந்து முடித்து வரும்படி தீர்மானிக்கப்பட்டது.

5. கான்பரன்ஸ் சம்பந்தப்பட்ட அவசர காரியங்களைக் கூடி நடத்துவதற்குக் கமிட்டி மெம்பர்களில் அடியில் கண்ட கனவான்களைச் செலக்ட் கமிட்டியாக நியமிக்கப்பட்டது.

ஸ்ரீமான்களான சி. வெ. ரத்தினசாமி நாடார், சு. மூ. ச. மாரிமுத்து நாடார், அ. சாமிநாத நாடார், செ. தங்கவேல் நாடார், வி. சுடலைமுத்து நாடார், க. பெரியசாமி நாடார், அன. ம. கருப்பண்ணசாமி நாடார்.

6. கமிட்டி ஆபீஸில் கான்பரன்ஸ் சம்பந்தமான வேலைகள் முடிவுபெறும் வரை மீ 1-க்குரூ 15-க்கு மேல்படாமல் ஓர் சேவகன் நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

7. உபசரணைக் கமிட்டி விலாசத்திற்கு "மகாநாடு" கும்பகோணம் என்ற தந்தி விலாசத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

8. நாளது வரையில் கமிட்டி ஆபீஸ் சம்பந்தமான தபால், தந்தி கூலி செலவு மேல்படி ரூ 6—13—6 ம் சாங்ஷன் செய்யப்பட்டது.

9. மதுரை நாடார் பிரவிவிருந்து வந்த சாம்பிள் டிக்கட்டுகளைப்பற்றிய விபரங்களை நேரில் பிரஸிடெண்டும், செக்ரட்டேரியும் முடிவுசெய்து கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

V. சுடலைமுத்து நாடார்,
காரியதரிசி.

# ரசத் திரட்டு.

## ஆலயப்பிரவேசம்.

தீண்டாதாரின் ஆலயப் பிரவேசத்தைக் குறித்து மகாத்மாவின் அபிப்பிராயத்தை அறிய விரும்பிய கார்வார் (வட கன்னடம்) சமுதாய ஊழியர்களின் கடிதமொன்றுக்கு மகாத்மா பதிலளித்திருப்பதில், "நாம் நமது தேசமக்களும், நம் மதத்தைச் சேர்ந்த சகோதரர்களுமான (தாழ்த்தப்பட்ட) ஏழை மக்களுக்கு நமது ஆலயக் கதவுகளை மட்டுமன்றி, நம் இருதயத்தின் கதவுகளையும் தாராளமாகத் திறந்து விட்டால் தான் கடவுள் மீண்டும் நம் ஆலயங்களுக்குள் வருவார்" என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். கார்வார் சமுதாய ஊழியரான எஸ். டி. நத்கார்னி என்பவருக்கு காந்தி தூக்கத்திலிருந்து மகாத்மா பின்வருமாறு பதிலளித்திருக்கின்றார்:—உமது கட்சியிலுள்ள நம் நண்பர்களை கார்வாரில் தீண்டப்படாதார் என்ச் சொல்லப்படுபவர்களுக்காக ஆலயமொன்று கட்டித்தருவதற்கு இணங்கச் செய்ய முயன்று வருவதறுகுச் சந்தோஷிக்கின்றேன். அவ்வாறு செய்தால் அவர்கள் இதுவரை அடக்கிக் கொடுமைக்குட்படுத்தி வைதிருந்தவர்களுக்கு நீதி வழங்குவதற்குப் பதிலாகத் தங்களுக்கே நீதி வழங்கிக்கொண்டதாகும். கடவுள் நமது ஆலயங்களை விட்டுப் போய்விட்டார் என்பது தான் என் அபிப்பிராயம். நாம் நம் தேசமக்களில் ஒருபகுதியினரைக் கடவுளுக்கு விரோதமானபடி நடத்தியதால் கடவுளே தம்மைத் தீண்டாதவராயும், கிட்டவரக்கூடாதவராயும், பார்க்கக் கூடாதவராயும் செய்து கொண்டார்.

⁂ ⁂

## பிராமணன்.

திருமகள் சாரளாதேவி சௌத்ராணியவர்கள் சின்னாள் முன்னர் ஐதராபாக்கத்தில் நடைபெற்ற சமுதாயச் சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்து நிகழ்த்திய அரிய சொற்பொழிவினூடே, 'பிராமணன்யார்?', 'சாதி மொழி வினவா அன்றிப் பிறப்பினுவா?' 'பிராமணீயத்தின் உயர் நிலை' என்பன பற்றி நன்கு விவாதித்துள்ளார்கள். அவற்றின் சுருக்கம் வருமாறு:—

தற்காலப் பிராமணர்கள் பிராமணீயத்தின் உயர்ந்த லட்சியத்தை மறந்துவிட்டார்கள். உடல் தூய்மையும் அறிவுத்தன்மையும் பெறுவதால்மட்டும் ஒருவன் பிராமணதர்மத்தைக் காப்பாற்றியவனாவான் எனக் கருதுகின்றனர். இது தவறு. அசுத்தமானவனேயும் ஆலிங்கனம் செய்துகொள்ளும் இருதயமும் அத்தகையோனைத் தூய்மைப்படுத்தும் விருப்பமும்; அநாகரீகர்களையும் நாகரீகப்படுத்தி உடல் தூய்மையிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும் மேம்பாடடையச் செய்யும் முயற்சியும் எவனிடம் காணப்படுகின்றனவோ அவனே பிராமணன் ஆவான். அக்ஸ்டியர் கர்ட்மிராண்டி ஜனங்கட்குக் கல்வியறிவு புகட்டி அவர்களை நாகரீகத்திற் சிறந்த ஆரியர்களாக்கினர். இக்காலத்திலோ பிராமணன் எவனாவது தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தொண்டுசெய்ய முற்பட்டால் அவன் சாதி பகிஷ்காரத்திற்கு உள்ளாகிறான். எவன் உள்ளத்தில் சமுதாயத்திலுள்ள எல்லாவகுப்புகளைச் சேர்ந்தவர்களையும் பேதபுத்தியின்றித் தழுவும் களங்கமற்ற அன்பு குடிகொண்டிருக்கிறதோ; எவனது சட்ட ஏற்பாட்டின் கீழ் சமுதாயத்தில் மிகத்தாழ்ந்த நிலையுள்ளவனும் மிக உயர்ந்த நிலைக்குவர இடமிருக்கிறதோ அவனே சட்டங்களை வகுக்க உரிமை பெற்றவனாவான். பிராமணத்துவத்தை நாலுபுறமும் வேலி எடுக்கப்பட்ட ஓர் இடமாகவும் குறிப்பிட்ட குடும்பத்தில் அல்லது ஜாதியில் பிறவாதவன் அதை அணுகக் கூடாதென்றும் சொல்லுதல் அறியாமை. பண்டைக் காலத்தைப்போல் பிராமணத்துவம் என்பது தபசினால் புலனடக்கத்தினால் பெறக்கூடிய பேறாகக் கருதப்பட வேண்டும். பிறப்பினால் பிராமணன் ஆகக்கூடும் எனும் கொள்கைபோக வேண்டும். பிராமணசாதியில் பிறந்த ஒருவன் மற்றவர்களைப்போலவே சாதாரண தொழில்களை மேற்கொள்ளுவானானால் அத்தொழில்களைச்செய்யும் மற்றவர்களைப்போல் அவனும் பிராமணனல்லாதானாகவே கருதப்பெறல் வேண்டும். தன்னையும், தன் குடும்பத்தையும் பற்றியவரையில் உலகப் பற்றையறுத்து வறுமை வாழ்வை மேற்கொள்ளுவதும் அதே சமயத்தில் பொது ஜனங்களின் செல்வப்பெருக்கிற்கும் நல்வாழ்வுக்கும் உபாயங்களைக் கண்டு பிடிப்பதுமே பிராமணீயமாகும். அவ்வாறின்றி பிராமணசாதியில் பிறந்த ஒருவன் சேவகத்துடன் திருப்தியடைந்திருக்கும் மனப்பான்மையை விடுத்துச் சுகபோக வாழ்வை மேற்கொள்ளுவானெனில் அவன் பிராமணத்துவத்திற்குரிய சிறப்புக்கும் மரியாதைக்கும் ஆசைப்படுதல் கூடாது. இதற்கு மாறாக வைசியனாகவோ சூத்திரனாகவோ பிறந்தவன் மேற்கூறிய பிராமண லட்சியத்தைக் கடைப்பிடித்து நடந்தால் அவனுக்கே அச்சிறப்புக்களும் மரியாதைகளும் உரியனவாகும். புத்துயிர்பெற்ற இந்து சமுதாயத்தில், சமுகத்துக்குத் தொண்டு செய்வதையே வாழ்நாள் பணியாகக் கொண்டவர்களை கணக்கெடுத்து அவர்களைப்பிராமணர்களென்றும், மற்றப்படி ஜீவனோபாயத்திற்காகத் தொழில் செய்வோர் எல்லாரையும் பிராமணரல்லாதார் என்றும் பிரித்து விடவேண்டும். அவசியமாயின் சமுதாய சீர்திருத்தக்காரர்கள், முன்னாளில் பரசுராமர் செய்ததைப்போல் புதிய பிராமண சாதியைப் படைப்பார்களாக.

நாடார் மகாஜன சங்கம்

# 11-வது மகாநாடு.

தஞ்சை ஜில்லா

## கும்பகோணத்தில்

அக்டோபர் மீ 1, 2, 3 உகளுக்கு
பிரபவ ஹூ புரட்டாசி மீ 15, 16, 17 உகளில்
நடைபெறும்.

இந்தியச் சட்டசபை அங்கத்தினர்
ஸ்ரீமான் ஆர். கே.
ஷண்முகஞ் செட்டியாரவர்கள்
கௌரவ அக்கிராசனம் வகிப்பார்கள்.

# பிறையாறு

## நாடார் உயர்தரப் பாடசாலை.

இப்பள்ளிக்கூடம் 1862 ம் வருஷம் மிஷன் பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வந்தது. இதனால் அதிக செலவாகிறதென்று தெரிந்து இதை 1882-ம் வருஷம் எடுத்து விட முயற்சி செய்கையில் வள்ளல் கும்பகோணத்தைச் சேர்ந்த கனம் தங்கமுத்து நாடார் அவர்கள் இதை வாங்கி தங்கள் ஆதிக்கத்தின் கீழ் நடத்திவந்தார்கள்: அன்று முதல் தங்கமுத்து நாடார் ஹைஸ்கூலென்ற நாமத்தோடு விளங்கிக் கொண்டு வருகிறது: இவ்வருடம் ஸ்கூல் பைனல் பரீட்சையில் 23 பேர்களுக்கு 11 பிள்ளைகள் தேர்ச்சி பெற்றிருப்பது பாராட்டத்தக்கது:

இப்பள்ளிக்கூடத்தின் சார்பில் பிராமணப் பிள்ளைகளுக்கு மாத்திரம் ஒரு போர்டிங் ஸ்தாபிக்கப்பட்டு வெகு காலமாக நடந்து வந்தது; பிராமணப் பிள்ளைகளுக்கு மாத்திரம் போர்டிங் ஸ்தாபித்து பிராமணரல்லாத பிள்ளைகளுக்கு யாதொரு வசதியும் ஏற்பாடு செய்யவில்லை என்ற குறை வெகு நாளாயிருந்து வந்தது: அக்குறையை நிவர்த்திக்க 1926 ம் வருஷம் முதல் பிராமணரல்லாத பிள்ளைகளுக்கும் போர்டிங் ஏற்படுத்தி வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போர்டிங்கில் சேரும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சம்பளம் உள்பட செலுத்த வேண்டிய சம்பள விகிதம்:— 5-வது வகுப்புக்கும்; அதன் கீழ் வகுப்புகளுக்கும் வருடத்திற்கு ரூபாய் 60. 1, 2, 3 பாரங்களுக்கு ரூபாய் 74. 4, 5, 6 பாரங்களுக்கு ரூபாய் 96. சப்ளிமெண்ட்டரி பிள்ளைகளுக்கு ரூபாய் 120. நாடார் ஏழை மாணவர்களுக்கு மேல்கண்ட சம்பள விகிதத்தில் இன்னும் குறைத்துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி இருந்தும் ஒரு நாடார் பிள்ளையும் இதுவரையில் இதில் சேர்ந்து வாசித்து வராதது மிகவும் விசனிக்கத்தக்கது:

நாடார் சகோதரர்களே! உங்கள் பிள்ளைகளை இப்போர்டிங்கில் சேர்த்து வாசிக்கவைக்க முயற்சி செய்யுங்கள்: போர்டிங்கில் சேர்த்து வாசிக்க வைப்பதினால் செலவு குறைவதோடு கூட பிள்ளைகளுக்கும் நல்லறிவும், நல்லொழுக்கமும், நல்ல பழக்க வழக்கங்களும் விர்த்தியாகுமென்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவதில்லை: ஆகையால் உங்கள் பிள்ளைகளை இப்போர்டிங்கில் சேர்க்க முன்வாருங்கள்:

ச. நமசிவாய நாடார்:

# ஏறல்.

## ஆடி அமாவாசை உற்சவம்.

ஏறற்பதியில் எழுந்தருளி பக்த கோடிகளை ஈடேறச் செய்துவரும் எந்தையாம் ஸ்ரீ அருணாசல சுவாமிகளுக்கு வழக்கப்படியான ஆடி அமாவாசை உற்சவம் நாளது மீ 13உ நடைபெறப் போகிறதாகையால் அப்பெருமானின் அருள் தேடும் அனைவரும் ஆங்குற்று புண்ணிய தீர்த்தம் பொருந்திய தாமிரவர்ணியில் நீராடி அப்பனது தரிசனத்தைக்கண்டு களித்து பண்டு செய்த பவம் போக்கி அவரது அருட்பிரசாதம் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொ. ச. சி. பச்சையநாடார்,
விருதுநகர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ ஆடி ௴ ௯௳

## கும்பகோண மகாநாடு.

1

நாடார் மகாஜன சங்கம் 11—வது மகாநாடு தஞ்சை ஜில்லா கும்பகோணத்தில் கூடப்போவதால் 'கும்பகோண மகாநாடு' என்று குறிப்பிடுகின்றோம்.

உபசரணைக் கமிட்டியார் விபரமான ஒரு முதலறிக்கை வெளியிட்டிருப்பதை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். உபசரணைக் கமிட்டி அங்கத்தினர்கள் பொறுப்பும், பொறுமையும், விசேஷ சக்தியுமுள்ள நல்ல தலைவர்களை உத்தியோகத்திற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். உபசரணைக் கமிட்டிச் சேர்மன், வைஸ் சேர்மன்கள், பிரதம காரியதரிசி, பொக்கிஷதார் முதலிய நிர்வாகிகள் மகாநாட்டைச் சிறப்புடன் நடப்பித்து, நாடார் சமூகத்தார் மகாநாடு நடத்திவருவதில் ஒரு புது வழியைக் கற்பிக்கும் ஆற்றலுள்ளவர்களேயாம். அவர்கள் சென்ற வருஷத்தில் தஞ்சை ஜில்லா மகாநாடொன்றை நடத்தவல்லாப் பிரயத்தனங்களுஞ் செய்தும் முடிவில் சிலருடைய ஒற்றுமைக் குறைவால் விட்டுவிடப்பட்டாலும், மகாஜன சங்கம் கௌன்ஸிலின் தீர்மானத்தை மதித்து மகாநாடு நடத்துவதற்கு முன் வந்ததும், சங்கத்தின் ஆசர்களுக்கு மிக மரியாதை செய்ததும் குறிப்பிடத்தக்கது. பலதரப்பட்ட அபிப்பிராயமுடையவர்களும் மகாநாட்டை நடத்திவைப்பதற்கு ஒற்றுமையுணர்ச்சி காட்டியுடனே உபசரணைக் கமிட்டி யமைந்ததும் போற்றத்தக்கது. ஒவ்வொரு மகாநாடும் கூடும்போது கௌரவ அக்கிராசனர் ஒருவரைத் தெரிந்தெடுப்பதில் உபசரணைக் கமிட்டியார் யாரைத் தேர்ந்தெடுக்கலாமென்று ஆலோசிக்க ஓர் கூட்டம் கூட்டுவார்கள். பல பேர்களுடைய நோக்கங்களையும் தனித்தனி கேட்கவும் கூடும். பத்திரிகைகளிலும் அபிப்பிராயங்கள் வெளிவந்து கொண்டிருக்கும். ஆனால் இவர்கள் அது விஷயத்தில் காலதாமதப்படுத்திக் கொண்டிராமல் தற்கால நிலைமைக் கேற்றவாறு சர்வ ஜனங்களும் ஒத்துக்கொள்ளத்தக்க ஓர் கனவானை (உயர் திருவாளர் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களை) உடனே தேர்ந்தெடுத்திருப்பது மிகவும் போற்றத்தக்கதே.

கும்பகோணம் தேசிய வளர்ச்சிக்கும், ராஜீய முற்போக்குக்கும், மத ஆராய்ச்சிக்கும் பேர் பெற்ற ஸ்தலமாகும். குறிப்பிட்ட எவ்வியக்கத்திலும் பிரஸ்தாப கமிட்டியாரும், தலைவர்களும் ஈடுபடாமலிருந்ததே ஜெயமாம். ஆகையால் ஜாதீய தனி ஸ்தாபன மகாநாட்டை நடத்துவதிலும் தேசிய மணங் கமழும்படி செய்வார்களென்று நம்புகிறோம். ஏழை பங்காளர் மகாத்மா காந்தி தென்னாட்டிற்கு எழுந்தருளும் சந்தர்ப்பமாயிருப்பதால் நாடார்களனைவரும் சிறந்த தேசிய வீரர்கள் எனத் திருவுள்ளம்பற்ற தீவிர வழி காட்டுவார்களாக.

மகாநாடு கும்பகோணத்தில் நடக்கப்போகிறதென்றாலும், அது தஞ்சை ஜில்லாவின் சார்பாகவே நடக்கிறதென்பதை ஜில்லாவிலுள்ள எல்லா நாடார்களும் மனதிற் கொண்டு உபசரணைக் கமிட்டியாருடன் ஒத்துழைத்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்திவைப்பது அவர்களுடைய கடமையென்பதை நாம் அதிகமாக எழுதத் தேவை இல்லை. நாடார் மகாஜன சங்கம்பிறந்ததும், முதல் மகாநாடு கூடியதும் தஞ்சை ஜில்லா வென்பதும், அது உற்பவித்ததற்குக் காரண கர்த்தாவாயிருந்தவரும் தஞ்சை ஜில்லா பிறையாறு ஸ்ரீமான் க. ரத்தினசாமி நாடாரவர்களே என்பதும் யாவரும் அறிந்த விஷயம். ஆகையால் தஞ்சை ஜில்லாவிலுள்ள எல்லா நாடார்களும் மகாநாட்டின் வேலைகளில் பங்கெடுத்துக்கொண்டு பூர்வ பெருமையைக் காப்பாற்றுவார்களென்று நம்புகின்றோம். மகாநாட்டை ஆதியில் ஆரம்பித்த பெரியாருடைய திருநாமமும் ரத்தினசாமி; இம்மகாநாட்டை நடத்தும் தலைவரின் திருநாமமும் ரத்தினசாமி என்றிருந்திருப்பதால் பெயர் விசேஷத்தில இம்மகாநாடு வெகு பிரபலமாய் நடக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

மற்ற ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள நாடார்களும் மகாநாடு சிலாக்கியமாய் நடைபெறுவதற்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்யப் பின்வாங்கமாட்டார்கள். உபசரணைக் கமிட்டியார் தங்கள் சுற்றுப் பிரயாண வேலைகளைத் துரிதப் படுத்துவார்களாக. கார் காலம் ஆரம்பிக்குமுன் அவர்கள் வெளிவேலையை முடித்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

சென்ற வருஷத்தில் தஞ்சை ஜில்லா நாடார் மகாநாடு கூடினால் அடுத்து கோயம்புத்தூர் ஜில்லா நாடார் மகாநாடு கூட்டிவிடலாமென்று ஒரு நாடார் நமக்கறிவித்திருந்தார். இப்போது மகாநாடு தஞ்சை ஜில்லாவில் நடக்க விருப்பதால் 12-வது மகாநாட்டை கோயம்புத்தூர் ஜில்லா நாடார்கள் அழைத்து நடத்தலாம்; அல்லது கோவையும், சேலமும் சேர்ந்து நடத்தலாம். ஆகையால் கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களிலுள்ள நாடார் பிரமுகர்கள் மகாநாடுகூடுமுன்பே இரு ஜில்லாக்களுக்கும் முக்கியமான ஒருஸ்தலத்தில் ஆலோசனைக் கூட்டங்கூட்டி 12-வது மகாநாட்டை அழைப்பிக்க வேண்டிய முயற்சி செய்வார்களாக.

இரண்டாவது மகாநாடு சென்னையிலே கூடியிருந்தாலும், அது சென்னை நாடார்கள் சார்பாய் நடக்கவில்லை. ஆகையால் நமது ராஜதானியில் பிரதம ஸ்தலமாகிய சென்னை நாடார் சமூகம் இன்னும் என்ன தாமதம் என்ற வினா வெழும்புகிறது. பன்னிரண்டாவது மகாநாட்டைப்பற்றி அவர்களும் ஆலோசிப்பார்களாக. அருப்புக்கோட்டை நாடார் சமூகத்தாருக்கும் ஞாபகப்படுத்துகின்றோம்.

## குறிப்புகள்.

### கோவைக் கூட்டமும், வரவேற்புத் தலைவரும்.

கோயம்புத்தூரில் கூடிய சென்னிந்திய கலவுரிமைச் சங்கமென்னும் பிராமணரல்லாதார் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திருவாளர் பி. இரத்தினசபாபதி கௌண்டரவர்களின் பிரசங்கத்தில் கதர் என்ற வார்த்தையை மருந்துக்குக்கூடக் காணோம். காங்கிரஸில் சேருகிற ஆரவாரத்தில் இதர முக்கிய விஷயங்களெல்லாம் மறந்துபோய்விட்டனபோலும். அது தான்போகட்டும்; தீண்டாமையை ஒழிக்கவாவது வேண்டாமோ? அதுவுமில்லை. மதுவிலக்காவது வேண்டாமோ? இல்லவே யில்லை. ஜஸ்டிஸ் கட்சி எலெக்ஷனில் தோற்றபோது மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை மதுரை மகாநாட்டில் கைக்கொள்ள முயற்சித்ததாலேயே ஜஸ்டிஸ் புத்துயிர் பெற்றது. இவைகளை நிறைவேற்றுவதில் தேச மக்கள் கொண்டிருக்க ஆசைக்கு காங்கிரஸிலாவது, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியிலாவது இடமில்லாததாலேயே ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தாவது தேச முன்னேற்றத்துக்கு அவசியம் பாடுபட வேண்டுமென்று பல வாலிபர்களும், பெரியோர்களும் வந்தார்கள். ஜஸ்டிஸ் தலைவர்களுள்ளத்தில் ராஜீய கொதிப்பே காணப்பட்டதன்றி நிர்மாணத்திட்டம் வெகு ஆழத்தில் கிடந்துவிட்டது. மகாநாடு சில தீர்மானங்களைச் செய்துவிட்டது வாஸ்தவமே. ஆயினும் தேச பக்தியும், சுயமரியாதையும் அடிப்படையான இடத்திலிருந்தே உண்டாக வேண்டும். அதற்குரிய இடம் கிராமாந்திரங்களேயாகும். கிராம முன்னேற்றமும், சமுதாய முன்னேற்றமும் உண்டாக வேண்டுமானால், கதருடுத்தல், தீண்டாமை விலக்கல், மது விலக்கல் ஆகியவைகளே கிராம ஜனங்களிடம் நெருங்கும்படி செய்யும் சக்தி வாய்ந்தன. சாதாரண ஜனங்கள் முன்னேற்றமடையவும், சுயமரியாதையுடன் வாழவும் வேலை செய்தால் பிராமணரல்லாத சமூகம் முன்னேற்றமடைந்து சுயராஜ்யம் பெறத் தகுதியுடையதாயிருக்கும். தலைவர்கள் உண்மையை மறந்து காங்கிரஸ், சட்டசபை என்ற மோகத்திலாழ்ந்துவிட்டால் அதுவே ஜஸ்டிஸ் இயக்கம் இருந்தவிடந் தெரியாமல் செய்துவிடும். ஆகையால் ஜஸ்டிஸ் தலைவர்கள் மகாத்மா காந்தியடிகளின் உண்மைத் தொண்டில் பங்கெடுத்துக் கொண்டு உழைக்க முன்வர வேண்டும்.

### நம்பிக்கையில்லைத் தீர்மானம்.

சென்னைப் பொதுச்சபையில் சுயராஜ்யக் கட்சியாருக்கு சோதனைகாலம் ஏற்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரஸில் சேர்ந்துகொள்வதென்றும், இரட்டையாட்சி யொழியும்வரையும் மந்திரி பதவிகளை யேற்பதில்லை யென்றும் தீர்மானித்ததோடல்லாமல் சுயராஜ்யக் கட்சியாரின் அந்தரங்க ஒத்துழைப்போடு நடந்துவரும் சுயேச்சைக் கட்சி மந்திரிகளிடத்தில் நம்பிக்கையில்லை என்ற தீர்மானமும் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவரப் போகிறார்கள். இவ்விதமாக மோசஞ் செய்துவிடுவார்களென்று திரு. சத்தியமூர்த்தி முதலிய பார்ப்பன சுயராஜ்யவாதிகளுக்குத் தெரிந்திருந்தால், முன்னமே சம்பளத் தீர்மான காலத்தில் பணகால் ராஜாவை உத்தியோகம் ஏற்கவொட்டாமலிருக்கும்படி கேட்டோம்; அவர் ஒத்துக்கொள்ளாமல் கவர்னர் மந்திரிகளையச் சுற்றிக் கொண்டிருந்தார்; ஆகையால் நாங்கள் நம்பிக்கை வைக்காமலிருந்துவிட்டால் தேசத் துரோகக் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியார் பணகால் மந்திரி சபையை அமைத்து நாட்டைக் கெடுத்துவிடுவார்கள் என்று சொல்லியிருக்க மாட்டார்கள். எலலை செய்யலாம், பாவம்! காலதேவதை ஒவ்வொருவரையும் சோதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. சுயராஜ்யக் கட்சியாருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தேச நலம் மாத்திரம் சுயராஜ்யக் கட்சியின் திட்டமாயிருந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்போது எல்லோரும் ஆஜராயிருந்து கவர்ன்மெண்டு தோல்வியுறும்படி செய்ய வேண்டியது கடமையாகும். தேச மக்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்களென்பதை நினைப்பூட்டுகிறோம்.

### சுயராஜ்யத் திட்டம்.

இந்தியாவுக்கு இன்னும் சீர்திருத்தங்களை வழங்குவதற்காக கூடிய சீக்கிரத்தில் ராயல் கமிஷன் நியமிக்க வேண்டுமென்று கேட்டுவந்த சுயராஜ்யக் கட்சியார் இப்போது ராயல கமிஷனில் ஸ்தானம் வகிப்பதா? கூடாதா? என்னும் நிலைமைவிட்டு கமிஷனுடன் ஒத்துழைக்கிறதில்லை யென்று பேசுகிறார்கள். சட்டசபையில் முட்டுக்கட்டை போடுவதைப்போல இதுவும் ஒரு காலப்போக்கோ என்னவோ என்று நமது குருவி கூறுகிறது. சுயராஜ்யத் திட்டம் தயாரிப்பதென்பதும் அதைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன செய்வதென்பதும் ஓட்டர்களை வஞ்சிக்கும் வார்த்தைகளேயாம். முன்னொரு தட்வை இந்திய சட்டசபையில் பல கட்சியாருங்கூடி தயாரித்து நிறைவேற்றிய தீர்மானம் நமக்குத் தெரியாதா? சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையை விட்டு வெளியேறியதையும், பின்பு அழையா விருந்தாய் நுழைந்து கொண்டதையும் அறியாதார் யார்? இனிமேலாவதும் ஜனங்களை யேமாற்றிவிட நினைக்கும் போலி தேசபக்தர்கள் உண்மையான வழியில் செல்ல முற்படுவார்களா?

### ரங்கிலா ரசூல் விவாதம்.

பஞ்சாப் ஹிந்து ஒருவர் முகம்மதிய மதாச்சாரியராகிய முகம்மது நபியைப் பற்றி அவதூறாய் "ரங்கிலா ரசூல்" என்ற துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிட்டிருந்தாராம். அதில் கண்ட விஷயங்கள் முகம்மதியர்களுக்கு மனவருத்தமுண்டாக்கக் கூடியதாயிருந்ததால் கவர்ன்மெண்டார் அதை பறிமுதல் செய்துவிட்டு எழுதியவர் பேரில் 153—வது செக்ஷன்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களாம். கீழ்க் கோர்ட்டில் குற்றமென்று தீர்ப்புச் சொல்லியபின் பேரில் லாகூர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில் நீதிபதி திலீப்ஸிங் துண்டுப்பிரசுரத்தில் கண்ட விஷயங்கள் அவதூறானதென்று கண்டித்தாராயினும் 153-வது பிரிவின்படி தண்டிக்க முடியவில்லையென்று குற்றஞ் சாட்டப்பட்டவரை விடுதலை செய்துவிட்டார். அதன் பேரில் "முஸ்லீம் அவுட்லுக்" என்னும் பத்திரிகை நீதிபதியைக் கடிந்து தாக்கி யெழுதியது. அத்தாக்குதல் கோர்ட்டை அவமதிப்பதாகுமென்று பத்திராதிபருக்கும், பிரசுரித்தவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது. நீதிபதி ஒரு ஹிந்து வென்பதற்காக அவர் ராஜிநாமா செய்துவிட வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் அவரை நீதிபதி ஸ்தானத்தை விட்டு நீக்கிவிட வேண்டுமென்றும் முகம்மதியர்கள் பலவிடங்களிலும் ஆயிர பதினாயிரக் கணக்காய்க் கூட்டங்கூடி தீர்மானித்து வருகிறார்கள். நமது சென்னை மாகாணத்தில் தஞ்சை ஜில்லா ஆவூர் என்ற கிராமத்தில் கூடிய அகில இந்திய பிராமண சம்மேளனம் என்ற பார்ப்பனர் கூட்டத்தில் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் சூத்திரர்கள் என்று தீர்மானஞ் செய்தார்களாம். எந்த பிராமணரல்லாதாராவது பார்ப்பனர்களைக் கண்டிக்கக் கூட்டங் கூட்டினார்களா? என்று கேட்கிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## 'சாதி பேத மெனும் சங்கடத்தை விட்டறியேன்'!

**திராவிட சகோதர சகோதரிகாள்!**

எக்காட்டிலும் காணா சாதிபேதம் எனும் சங்கடம் நம் நாட்டில் குடியேறி ஆயிரக்கணக்கான வருஷங்களாய் இந்திய மக்களை ஒருவர்க்கொருவர் கொண்டு கொடுத்தல், கண்டுகளித்து, உண்டு உடுத்து, கலந்து குலவாவண்ணம் வேற்றுமை உண்டுபண்ணி வெவ்வேறாய்ப் பிரித்தும் பலவாறாய் நமக்கு இழிக்கண் விளைத்தும் வருகிறதென்பது நாம் யாவரும் நன்குணர்ந்த விடயம். இச்சாதிபேதம் திராவிட மக்களாகிய நமக்குள் ஆதிகாலத்தில் இல்லையென்றும், மத்திய ஆசியாவிலிருந்து நம் நாட்டில் வந்து குடியேறிய ஆரியரென்று அழைக்கப்படும் பார்ப்பனர் சுயநலச் சூழ்ச்சியால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கல்வி கேள்வி ஆராய்ச்சியுடைய நம் இயக்கத் தலைவர்களும் பல்வேறு ஆதாரங்களைக் கொண்டு திருப்திகரமாய் நிரூபித்திருக்கிறதை நாம் நன்கு அறிவோம்.

எல்லாம் அறிந்தும், எல்லையறக் கற்றுக் கேட்டும் நம்மக்கள் இன்னும் இப்பிணியை சமமை அணுகாது அறவேயொழிக்க முயலாமலே வாளாயிருப்பது எனனே? சாதி பேதத்தை அறவே யொழித்து நம் இந்திய மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் கைக்கொள்ளும் வரையில் நாம் நீண்ட காலமாய் அடையவிரும்பும் சுயராஜ்யத்திற்குக் கிஞ்சித்தும் அருகரில்லோம்.

மகரிஷிகளும் சாதிபேதமெனும் வித்தியாசம் செய்வ சிருஷ்டியில் ஏற்படாததென்றும், தெய்வத்திற்கு அசம்மதமென்றும், உலக இயற்கைக்கும் சுபாவத்திற்கும் மாறுபாடென்றும் "சிறப்பும் சீலமுமல்லது பிறப்பு நலந்தரா" எனவும் கபிலமுனிவர் பல்வேறு காரணங்களைக் கொண்டு சித்தாந்தித்திருக்கிறார்.

பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்.

ஃ ஃ ஃ

"ஒட்டிய மிலேச்சருணர் சிங்களர்
இட்டிடைச்சோனகர் யவனர் சீனத்தர்
பறபலர் நாட்டிலும் பார்ப்பாரிலையால்
முற்பட்டைப்பதனில் வேருகிய முறைமைபோல்
நால்வகைச்சாதியிந் நாட்டினில் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவதொழுக்கால்
பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே
அவ்விருசாதியி லாண் பெண் மாறிக்
கலந்துகருப்பெறல் கண்டதுண்டோ
ஒருவகைச்சாதியா மக்கட்பிறப்பினில்
இருவகையாக நீசியம்பிய குலத்துள்
ஆண்பெண்மாறி அணைந்து மணந்தபின்
கருப்பொறையுயிர்ப்பதுங் காண்கிலீரோ

ஃ ஃ ஃ

பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல் போல்
மாந்தரிற் பேதமாய் வடிவெவர் கண்டுளார்?
வாழ்நாளுறுப்பு மெய்வண்ண மோடறிவினில்
வேற்றுமையாவதும் வெளிப்படலின்றே."

(கபிலரகவல்)

சுயவஞ்சகப் பார்ப்பனரால் நமக்குள் புகுத்தப்பட்ட சாதிபேதமெனும் நோயை நம் நாட்டினின்றும் வேரோடு அறுத்துக் களைந்தொழித்து நமக்குள் சமத்துவம், சமாசம், சகோதரத்துவம் எனும் நித்திய சுகத்தை நிலைநாட்ட அவதார புருஷர்களாய்த் தோன்றிய புத்தர், திருவள்ளுவர், கபிலர், ராமானுஜ ஆச்சாரியார், தயானந்த சரஸ்வதி, ராமமோகன்ராய், விவேகானந்தர், கருணாநிதி ராமலிங்க ஸ்வாமிகள், டாக்டர் மாதவன் நாயர், தியாகராய செட்டியார் முதலிய அரிய பெரிய மகான்கள் பட்டபாட்டையும் கஷ்டத்தையும் நாம் முற்றிலும் மறந்தோமா?

இப்போதும் தனக்கெனவாழாபிறர்க்குரியாளரான ராஜா பானகல் ராஜா, டாக்டர் கிருஷ்ணன் நாயர், ஈ. வி. ராமசாமி நாயக்கர், சுரேந்திரநாத் ஆரியா, சர். வேங்கடரெட்டி நாயுடு காரு, சர். பெட்ரோ, எ. ராமசாமி முதலியார், ஜெ. எஸ். கண்ணப்பர், ஜெ. என். ராமநாதன், தணிகாசலம்செட்டியார், டாக்டர் நடேசமுதலியார், பி. டி. ராஜன், அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் முதலிய எண்ணிலா நமது இயக்கத் தலைவர்கள் நம் திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தும், தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் நமக்காகத் தத்தம் செய்தும் பாடுபட்டு வருகிறதை நாம் நேரில் பார்க்கிறோமல்லவா? "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" எனும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் மெல்லிய குரலோசையும், "சாதியும் சமயமெனும் சங்கடங்கள் விட்டறியேன்" என விண்மாரி போன்று இரு கண்மாரி பெய்யவே கதறியழும் ராமலிங்க ஸ்வாமிகள் அழுகுரலோசையும் நம்மனதைக்கரையச் செய்யவில்லையா?

ஐயோ! இக்கன்மனப் பார்ப்பனச் சூழ்ச்சியினின்றும் என்று நாம் கடைத்தேறுவோம்! என்று நாம் பார்ப்பனச் சூழ்ச்சியாலாய சாதிபேதம் முதலிய கண்மூடி வழக்கங்களை மண்மூடிப் போகச்செய்து அடிமையினின்றும் நீங்கி சுயேச்சையும் சுதந்திரமும் பெறுவோம்!!

சகோதர சகோதரிகாள்! தெய்வ சம்மதத்திற்கு மாறுபாடானதும், திராவிடர் கொள்கைக்கு முரண்பட்டதும், மகான்களாலும் நமது இயக்கத் தலைவர்களாலும் வெறுக்கப்பட்டதும், நமக்குள் ஒற்றுமையை நீக்கி வேற்றுமையை நாளுக்கு நாள் விருத்திசெய்கிறதும், நம்தேசத்திற்கு பல்வேறு இடைஞ்சல்களை விளைத்து வருகிறதுமான சாதிபேதத்தை முற்றிலும் ஒழித்து சமத்துவம், சகோதரத்துவம், சமரசமாய மும்மூர்த்திகளை எந்நாள் நாம் அடைந்து போற்றுகிறோமோ அந்நாளே நாம் சுயவஞ்சகப் பார்ப்பனப் படுகுழியினின்றும் கரையேறும் நாள். அந்நாளே நாம் கடவுளைத் திருப்திசெய்யும் நாள். அந்நாளே நம மகான்களையும், இயக்கத்தலைவர்களையும் மகிழ்விக்கும் நாள். அந்நாளே இந்தியமாதாவை சந்தோஷிப்பிக்கும் நாள். அந்நாளே நாம் சுயராஜ்யம் பெறும்நாள். அந்நாளை திராவிடமக்களாய நமக்கு சீக்கிரம் கைகூட்டி வைக்கும்படிக்கு எல்லாம் வல்ல இறைவனை எல்லாம் தலைகுனிந்திருகைகூப்பி இறைஞ்சுவாம்.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ்சிலரை நீக்கி வீசுமோ?
கதிரோன் சிலரைக் காயேனென்னுமோ?
மாநிலஞ்சுமக்க மாட்டேனென்னுமோ?
வாழ்நான்கு சாதிக்குணவு காட்டிலும்
கீழ்நான்கு சாதிக்குணவுகாட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப்பேறும்
சாவதும் வேறிலை தரணியோர்க்கே.
குலமுமொன்றே குடியுமொன்றே
இறப்புமொன்றே பிறப்புமொன்றே
வழிபடு தெய்வமுமொன்றே யாதலால்
முன்னோருரைத்த மொழிதவறுமல்
எந்நாளாயினும் இரப்பவர்க்கிட்டு
புலையும் கொலையும் களவும் தவிர்த்து
நிலைபெற அறநெறி நிற்பதையறிந்து
ஆணும் பெண்ணு மல்லதை யுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது
சிறப்புஞ்சீலமு மல்லதுபிறப்பு
நலந்தருமோ பேதையீரே.

(கபிலரகவல்)

வி. கணபதிமுதலியார்,
வக்கீல், விழுப்புரம்.

---

**சிறப்பினுஞ் சாதிசீரியதன்றிப் பிறப்பினுலெனக்கொளல் பேதமை.**

## பல திரட்டு.

சாண்ட்ஹெட்ஸ் என்ற இடத்தை விட்டு ஆக்யப் என்ற இடத்திற்கு நிலக்கரியேற்றிக்கொண்டு புறப்பட்ட 'ஷாவாடா' என்ற கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென மூழ்க ஆரம்பித்துவிட்டது. தப்பிக்க சாதனம் தேடு முன் மூழ்கிவிட்டது. அதில் இருந்த 71 பிரயாணிகளில் 14 இந்தியரும் 5 ஐரோப்பியரும் மூழ்கியிறந்தனர். எஞ்சியவர் கப்பலிலிருந்து தற்செயலாய் கழன்று விழுந்த படகுகள் உதவிகொண்டு உயிர்தப்பி ஒருநாள் பூராவும் தண்ணீரில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். மறுநாள் 'கிளின் போளியா' என்ற கப்பலால் காப்பாற்றப்பட்டனர். இது பற்றி விசாரணை நடைபெறும்.

* *

ரயில் வண்டியில் விடப்பட்டுப் போன பெட்டிப்பிரேதப் பிந்திய விபரமாவது:—சந்திரபாலதேவியின் கணவரும், மற்றையோரும் ஜாமீனில் விடுதலை வேண்டினர். கணவன் தன்மனைவி காசியிலிறந்ததாகவும், மணிகர்ணிகா கட்டத்தில் தகனம் நடந்ததாகவும் கூறினான். ஜாமீன் மறுப்புபற்றி ஜூலை மீ 20௳ விசாரணை நடைபெறுமென மாஜிஸ்ட்டிரேட் அறிவித்தார்.

* *

கல்கத்தா பெஹலாபஜாரில் வசித்துவரும் ஓர் விதவையின் ஏகபுத்திரி நோய்வாய்ப்பட்டு வருந்திவந்தாள். அந்நோய் தீர்த்துவிடுவதாக ஒருவன் பக்கீர் வேடங்கொண்டு வந்து, நோய் நிவர்த்திக்கென சுமார் ரூ 2000 பெறுமான நகைகள் கேட்டுவாங்கி ஓர் குடத்தில் போட்டு மந்திரம் ஜபிப்பதாக நடித்து, பின் வீட்டார் வெளிப்போந்த சமயம் பார்த்து நகைகளை யெடுத்துக்கொண்டு ஓடி விட்டான். நம்பிக் கெடுபவர் நாட்டி லனேகம்.

* *

ஆஜ்மீர் ரெயில்வே ஊழியரும் ஆரிய சாமஜியுமான பய்ரோசிங் என்பவர் தன் வீட்டறையுள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மூலம் அலி என்னும் முகமதியர் சுட்டுக் கொன்றதாகவும், கொன்றவரும் கொலையுண்டவரும் ரெயில் தொழில் செய்பவர்களென்றும், அவர்களொருவருக்கொருவர் சத்தியக்கம் பற்றி விவாதித்துக் கொள்வது வழக்கமெனவும்,' குற்றவாளி குற்றத்தை யொப்புக்கொண்டுவிட்டதாகவும் ஆஜ்மீர் நிருபர் ஹிந்துஸ்தான் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதுகிறார்.

* *

ரங்கூன் ஹம்ரோடு ஸ்டேஷனில் ரயிலிலிருந்து தப்பியோடிய கைதியான ஸான்பியின் போலீஸாரால் டாட்மியே'ப் பிரதேசத்தில் மீண்டும் பிடிபட்டான். அவனது வீட்டில் அனேக திருட்டுச்சாமான்கள் அகப்பட்டனவாம்.

* *

கள்ளிக்கோட்டையில் லங்காஷயர் பியூஸிலர்ஸ் என்ற ராணுவத்தைச் சேர்ந்த ஒரு ஸோல்ஜர், ரூ 80 பெறுமான சைக்கிளைத்திருடி ரூ 15-க்கு விற்றுவிட்டு போத்தனூருக்கு ஓடிவிட்டார். ஓடியும் உய்யும் வழியிலாது அங்கு கைதி செய்யப்பட்டார். மீண்டும் அவரைக் கள்ளிகோட்டை கொணர்ந்து காவலில் வைத்திருக்கின்றனர். ராணுவக் கோர்ட்டாரால் விசாரிக்கப்படுவர்.

* *

திவான்பகதூர் சேத்ஜீவன்தாஸ்ஜீ, கணம் சேத் கோவிந்ததாஸ்ஜீ ஜபல்பூர், அனதை ஆசிரமக் கட்டடத்திற்கு ரூ 10000 நன்கொடை யுதவியுளார்கள்.

* *

கராச்சியில் ராம்சிநூர் என்ற மகமதியன் முஸ்மத்காஜிரா என்ற தன்மகளை காமவேட்கையால் பலவந்தப் புணர்ச்சிக்கிழுக்க, அவள் மறுக்க மறுநாள் அப்பாவி அம்மாதைக் கொன்றுவிட்டான். விசாரணையின் முடிவாக தூக்குத்தண்டனையடைந்தான். என்ன கொடுமை! இவனை மனிதனெனவழுத்தலாமா?

## சுவாமி விலக்ஷணனந்தர்.

சுவாமி விலக்ஷணனந்தர் ஓர் பிராமண சந்நியாசி. கல்விக்களஞ்சியமென்றே சொல்லலாம். சுவாமியவர்கள் இலண் விஜயஞ்செய்திருந்து சென்ற வெள்ளிக்கிழமையன்று தம்பாசமுத்திரஞ் சென்றார்கள். சுவாமிகளை சில நண்பர்கள் பல விஷயங்களைப்பற்றிக் கேட்டுகொண்டிருந்தபோது எழுதலைமுறை வரையும் ஒரே இரத்தத்தின் சாரமிருப்பதாய் வெளியிட்டார்கள். இதன் மூலம் சுவாமிகள் பிராமணன் மகன் பிராமணன்தான் என்ற கொள்கையுடையவரென்றே தெரிகிறது. அதைப்பற்றியமட்டில் எவ்வித பேதமுமில்லாமல் உணவு முதலியவை யருந்துகிறார். பிராமணரல்லாதார் ஆலயப் பிரவேசத்தைப்பற்றிய கேள்விவந்தபோது, இப்போதுள்ள ஆலயங்களில் பிரவேசித்து பல தொல்லைகளை வளர்ப்பதைப் பார்க்கிலும் தனி ஆலயங்கள், நாலுபக்கமும் மூலஸ்தானத்திற்கு வாசலவைத்துக்கட்டி சகலரும் வித்தியாசமில்லாமல் ஈசுரமூர்த்தங்களை வணங்குதல் சிறப்பு என்றார்கள். இவைகளையெல்லாம் பிராமணரல்லாதார் கவனித்து காலத்திற்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

திருவிதாங்கூர் கருநாகப்பள்ளி முனிசிப்கோர்ட்டு தீப்பற்றி எரிந்து போனதாம். காரணம் புலனாகவில்லை.

* *

சென்னை மெடிக்கல் காலேஜில் ஜூலை மீ 20௳ காலையில் தீபிடித்தேற்பட்டது. உபந்நியாச மண்டபமும், சாமான்கள் வைத்திருக்கும் அறையும், ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி சாலையும் நீக்கிரையாயின. ஏற்பட்டசேதம் லக்ஷ ரூபாய்க்கதிகமாகுமெனத் தெரிகிறது. தீப்பற்றிய காரணம்பற்றி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

* *

பம்பாயில் ஸ்ரீமதி மாராணி யென்னும் ஓர் இந்துப்பெண் உபாத்திமைத் தொழில்கொண்ட முஸ்லீம் ஒருவரை விவாகம் செய்திருக்கிறாள். விவாகம் செய்வதில் மதபேதம் பாராட்டக்கூடாதென்றும், தன்னைப்போன்ற பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தார்க்கிது அபூர்வமன்றென்றும், மனப்பொருத்தமே மணப்பொருத்த மாகுமென்றும் சமாதானம் கூறுகிறாளாம். இம்மாது டாக்டர் கிருஷ்ண பந்தர்காரின் பேத்தியாம்.

* *

சிருங்கேரி சங்கராச் சாரியார்பிராமணர் நாட்டினம் கழற்றவும் நூல் நூற்கவும் கூடாதென்று தமது சிஷ்டர்களுக்கு உபதேசம் வைக்கிறாராம்.

* *

ஆஸ்டிரேலியாவில் ஒரு இந்திய ஏஜெண்டு ஜெனரல் இருக்கவேண்டுமென்கிறார்.

* *

தோர்காபு சோகர், வாக்ஜிபூர் ஆகிய கிராமங்களிலுள்ள 75 மல்கான முஸ்லீம் குடும்பத்தினர் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டனர்.

* *

கூடலூருக்கும் புதுச்சேரிக்கும் இடையிலுள்ள 28 மைல் தூரத்திற்கு ரயில்பாதை போட தென்னிந்திய ரயில்வே கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

* *

இங்கிலாந்து பார்லிமெண்டு இந்திய மெம்பர் திரு. சக்லத்வாலா வியாதிவாய்ப்பட்டுள்ளாரென அறிவிக்கப்படுகிறது.

* *

வர்க்காரு ஜில்லாவிலுள்ள தல்ப்டி என்ற ஊரில் தாணியாக்களுக்கு மூன்னிலையில் ஹிந்துக்களை தங்கள் தங்கள் தலைப்பாக்களை எடுத்துக் கொள்ள வேணுமென்று பலாத்கரித்தனர். கழியடியும் உண்டே.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

### 4-ம் பிரிவு, 8-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி 'நவ ஜீவன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின் வருமாறு:—

அடுத்த அத்தியாயம் வரை இந்த விஷயத்திற்குப் புறம்பான சில விஷயங்களைச் சொல்லி முடிக்க வேண்டியிருக்கிறது. மண் சிகிச்சை முறையை நான் பரீட்சை செய்துபார்த்ததுடன், ஆரோக்கியத்தை வரையறுத்தும் நான் பரீட்சை செய்து வந்தேன். பின் சொன்ன விஷயத்தைப் பற்றிப் பிறகு நான் பிரஸ்தாபிக்க வேண்டியிருக்குமாயினும், இந்தச் சந்தர்ப்பத்திலும் அதைப் பற்றிச் சிறிது சொல்லாமலிருக்க முடியவில்லை.

ஆரோக்கியப் பரீட்சைகளைப் பற்றிப் பல வருஷங்கள் முன் தொடர்ச்சியாக நான் "இந்தியன் ஒப்பினியன்" என்ற பத்திரிகையில் எழுதிவந்த வியாசங்களைப் பிறகு "ஆரோக்கிய வழி" என்னும் மகுடத்துடன் ஆங்கிலத்தில் ஒரு புத்தக ரூபமாக வெளியிட்டிருப்பதால், அந்த விஷயத்தைப் பற்றி இப்பொழுதாவது, பிறகாவது, நான் விஸ்தாரமாக விவரிக்க வேண்டியிருக்காது. நான் எழுதியுள்ள சிறிய நூல்களில் அந்தப் புத்தகம் கீழ் நாட்டிலும், மேனாட்டிலும் மிகுந்த ஆவலுடன் படிக்கப்படுகிறது. எனக்கே அதற்குக் காரணமின்னதென்பது தெரியவில்லை. ஆயினும் "இந்தியன் ஒப்பினியன்" பத்திரிகையைப் படித்திராத பல கீழ், மேற்தேசத்தினர் அந்தப் புத்தகத்தைப்படித்ததால் தங்களுடைய வாழ்க்கை முறையைத் திருத்திக்கொண்டிருப்பதை நான் அறிவேன். அவர்கள் என்னுடன் கடிதப்போக்குவரத்து நடத்தியிருக்கின்றனர். அந்த வியாசங்களில் நான் தெரிவித்திருந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லையாயினும், அதில் குறிப்பிட்டுள்ள சில விதிகளில் நான் கட்டுபடலான மாறுதல்களைச் செய்துகொண்டிருப்பதாலும், அந்தப் புத்தகத்தைப் படித்தவர்களுக்கு அந்த மாறுதல்கள் இன்னவையென்று தெரியாததாலும், அவர்கள் அவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாதலாலும், அந்தப் புத்தகத்தைப் பற்றிச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது.

பாரமார்த்திக நோக்கத்துடனேயே நான் பல நூல்களை எழுதியிருப்பது போலவே இந்தப் புத்தகத்தையும் நான் எழுதினேன். ஆகவே இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சில விதிகளை நானே அனுஷ்டிக்க முடியாமலிருப்பது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது.

குழந்தைப் பருவத்தினராக இருக்கையில குடிக்கும் தாய்ப்பாலைத் தவிர வேறெவ்விதப்பாலும் மனிதர்களுக்குத் தேவையில்லையென்பது எனது திடமான நம்பிக்கை. அவர்கள் சூரிய வெயிலில் பக்குவமான பழங்களையும், கொட்டைகளையும் தவிர வேறு ஒன்றையும் புசிக்கக்கூடாது. திராக்ஷைப் பழம்போன்ற பழங்களிலிருந்தும், வாதாம் கொட்டையைப் போன்ற கொட்டைகளிலிருந்தும் அவர்களுடைய தசைகளுக்கும் நரம்புகளுக்கும் வேண்டிய ஊட்டம் கிடைக்கும். அத்தகைய ஆகாரப் பதார்த்தங்களைப் புசித்திருப்பவர்கள் மிருக ஆசையையும், இதர ஆசைகளையும் அடக்கிக்கொள்ளுவது சாத்தியப்படுகிறது. ஒரு மனிதர் என்னத்தைப் புசிக்கிறாரோ அதற்குத்தகுந்தபடியே அவர் இருப்பாரென்னும் இந்தியப் பழமொழியில் உண்மையிருக்கிறதென்பதை நானும் என்னுடைய சகாக்களும் அனுபவத்தினால் தெரிந்துகொண்டிருக்கிறோம். இந்த அம்சத்தை விஸ்தாரமாக அந்தப் புத்தகத்தில் விவரித்திருக்கிறேன்.

ஆனால் துரதிர்ஷ்டவசத்தினால் இந்தியாவில் நான் பிரசாரம் செய்த சில தர்மங்களை நானே கைவிட வேண்டியது அவசியமாயிருக்கிறது. போரில் யுத்தத்திற்கு நான் ஆட்கள் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டிருக் [illegible] என்னுடைய சரீரத்தில் உபாதை ஏற்பட்டது. மரண வாயிலை நெருங்கும் நிலைமைக்கு நான் வந்துவிட்டேன். பாலில்லாமல் என்னுடைய சரீரத்திற்கு ஊட்டத்தை உண்டுபண்ணிக்கொள்ள என்னாலியன்றளவு நான் முயற்சி செய்தேன். பாலுக்குப்பதிலாக வேறு எதைச் சேர்த்துக்கொள்ளலாமென்பதைத் தெரிந்துகொள்ளுவதற்காக டாக்டர்கள், வைத்தியர்கள், சாஸ்திரஞர்கள் இவர்களுடைய உதவியை நான் நாடினேன். சிலர் மஞ்ஜலத்தையும், சிலர் வெண்ணையையும், சிலர் வாதம்பாலையும் சேர்த்துக்கொள்ளச் சொன்னார்கள். இவைகளை உபயோகித்துப் பரீக்ஷை பார்த்தேன். படுக்கையிலிருந்து வெளிப்பட எனக்குச் சக்தி ஏற்படவில்லை. ஆயுர்வேத சாஸ்திரத்தில் வைதிகத்தைக் கவனிக்க வைத்திய சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை என்பதற்கு சரகருடைய கிரந்தங்களிலிருந்து வைத்தியர்கள் ஆதாரங்களை எனக்குப்படித்துக் காட்டினார்கள். ஆகையால் பாலைச் சேர்த்துக்கொள்ளாமல் நான் இருந்துவரும்படி செய்யும் விஷயத்தில் அவர்கள் எனக்கு உதவி செய்யக்கூடவில்லை. மாட்டு மாமிசத்திலிருந்து இறக்கிய ஸத்தையும், பிராந்தியையும் சேர்த்துக்கொள்ளும்படி எனக்கு உபதேசம் செய்தவர்கள் பாலில்லாமல் நானிருந்து வருவதற்கு எவ்விதம் யோசனை சொல்லக்கூடும்?

நான் பிரதிக்ஞை செய்துகொண்டிருந்ததால் ஆவின் பாலையாவது, மஹிஷத்தின் பாலையாவது நான் சேர்த்துக் கொள்ளுவதற்கில்லை. எல்லாப் பால்களையும் திரஸ்காரம் செய்வதென்றே நான் சங்கற்பம் செய்துகொண்டிருந்தேன். ஆனால் அவ்விதம் நான் பிரதிக்ஞை செய்துகொண்ட காலத்தில் பசுவின் பாலையும் எருமைப்பாலையுமே நான் நினைத்துக்கொண்டிருந்ததால் ஆட்டுப்பாலை உபயோகிக்கக்கூடாதென்பதில்லையென்று நினைத்து அதைச் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்து கொண்டேன். ஆயினும் நான் ஆட்டுப்பாலைச் சேர்த்துக்கொள்ள ஆரம்பிக்கையில் என்னுடைய பிரதிக்ஞையை நான் கைவிட்டு விட்டது எனக்குத் தெரிந்துதானிருந்தது.

ஆனால் ரௌலட் சட்டத்திற்கு எதிரிடையான கிளர்ச்சியை நடத்துவதில நான் ஈடுபட்டிருந்தேன். அதனுடன் நான் ஜீவித்திருக்க வேண்டுமென்ற ஆசையும் எனக்கு ஏற்பட்டது. ஆகையால் நான் வெகு காலமாகச் செய்துகொண்டிருந்த ஒரு பெரிய பரீக்ஷையைக் கைவிட வேண்டியதாயிற்று. ஆனால் ஆத்மாவானது எவ்வித ஆகாரத்தையும் உட்கொள்ளுவதில்லையாதலால் நமது ஆகாரத்திற்கும் ஆத்மாவிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். வெளியிலிருந்து உள்ளே தள்ளும் பதார்த்தங்களால் பாதகமில்லையென்றும், உள்ளேயிருந்து நாம் வெளியிடும் அபிப்பிராயமே பிரதானமென்றும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். இதில் அர்த்தபுஷ்டியிருக்கிறதென்பது வாஸ்தவமே. ஆனால் இது நியாயமானதா வென்பதை விசாரிக்காமல் கடவுளிடத்தில பயந்து, அவரை நேருக்கு நேரே பார்க்கிறவர்கள் ஆகாரத்தின் அளவிலும் குணத்திலும் ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமென்ற எனது திடமான அபிப்பிராயத்தைச் சொல்லி நிறுத்திக்கொள்ளுகிறேன்.

என்னுடைய கொள்கை அனுபவத்தில் சாத்தியப்படாமற் போயிருக்கையில் அதை நான் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடக் கடமைப் பட்டிருப்பதுடன், பிறர் அந்தப் பிரதிக்ஞையைச் செய்து கொள்ளக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால் என்னுடைய தர்மத்தை அனுசரித்து பாலை பஹிஷ்காரம் செய்தவர்கள் அதனால் அனுகூலமடைந்திருந்தாலாவது, அல்லது அவ்விதம செய்துவரும்படி அனுபவசாலிகளான வைத்யர்கள் யோசனை சொன்னாலாவது அன்றி அந்தப் பரீக்ஷையைச் செய்துகொண்டு வராமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன், ஜீரண சக்தி குறைவாக இருப்பவர்களுக்கும், படுத்த படுக்கையாக இருப்பவர்களுக்கும் பாலைப்போல ஊட்டத்தைக் கொடுக்கக்கூடியது வேறொன்றில்லையென்பது எனக்கு அனுபவத்தினால் தெரியவந்திருக்கிறது.

இந்த வியாசத்தைப் படிப்பவர்களில் எவரேனும் பாலுக்குப் பர்த்தியாக உபயோகிக்கக்கூடிய மாத்திரையான் ஏதேனும் இருப்பதாக அனுபவத்தில் தெரிந்து கொண்டிருப்பின் அதை எனக்கு அறிவித்தால் நான் அவர்களுக்கு மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன்.

### 4-வது அதிகாரம்,

### 9-வது அத்தியாயமாவது:-

ஆசியாக்காரர்கள் சம்பந்தமான உத்தியோகஸ்தர்கள் ஜோன்ஸ் பர்க்கில் அதிகமாக இருந்தார்கள். இந்தியர்கள், சீனக்காரர்கள், இவர்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களை இந்த உத்தியோகஸ்தர்கள் நசுக்கிக்கொண்டு வந்ததை நான் கவனித்து வந்தேன். "இங்கு வருவதற்கு நியாயமாக உரிமையுள்ளவர்களை அனுமதிக்க மறுக்கிறார்கள். இங்கு வர பாத்தியமில்லாதவர்கள் 100-பவுனைக் கொடுத்தால் அவர்களை இங்கே நுழைத்துவிடுகிறார்கள். நீங்களே இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யாவிடில், வேறு யார்தான் அதைச் செய்யமுடியும்!" என்று நாள் தவறாமல் பலர் என்னிடம் புகார் செய்துகொண்டிருந்தனர். எனக்கும் அந்த எண்ணம் தான் இருந்தது. இந்தத் தீங்கை நான் நிவர்த்தி செய்யாவிடில், டிரான்ஸ்வாலில் நான் இருந்ததற்குப் பிரயோஜனமில்லாமற் போயிருக்கும்.

ஆகையால் நான் இது சம்பந்தமாக சாக்ஷியத்தைச்சேகரிக்க ஆரம்பித்தேன். போதிய அளவு சாக்ஷியத்தைச் சேகரித்தபின் போலீஸ் கமிஷனரிடம் போய்ச்சொன்னேன். அவர் நியாயபுத்தியுடையவராக இருந்தார். நான்சொன்ன விஷயத்தில் அவர் தானே என்றிராமல் நான் சொன்னதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு, என்னிடத்திலுள்ள சாக்ஷியத்தைக் காட்டும்படி கேட்டுக்கொண்டார். சாக்ஷிகளை அவரும் நேரில் விசாரித்தார். நான் தெரிவித்துக்கொண்டது வாஸ்தவமென்பதை அவர் தெரிந்துகொண்டார். ஆனால் கறுப்பு மனிதர்களுக்குக் கெடுதலைச் செய்த வெள்ளைக்காரர்கள் குற்றவாளிகளென்று வெள்ளைக்கார ஜூரிகள் தீர்ப்பு செய்வது கஷ்டமென்பதை என்னைப் போல் அவரும் தெரிந்து கொண்டிருந்தார். "இருந்தாலும் நாம் முயற்சி செய்து பார்ப்போம். ஜூரிகள் இத்தகைய குற்றவாளிகளையும் விட்டு விடுவார்களென்பதற்காக நாமும் அவர்களைச் சும்மாவிட்டு விடுவது தகாது. அவர்கள் எல்லாரையும் நான் கைது செய்கிறேன். என்னால் முடிந்த வரையில் நான் பிரயாசைப்பட்டுப் பார்க்கிறேன்" என்று சொன்னார்.

அந்த வாக்குறுதி எனக்கு வேண்டியதில்லை. பல உத்தியோகஸ்தர்களிடம் எனக்கு சம்சயமிருந்தது. ஆனால் எல்லோர் மீதும் நிராக்ஷேபமான சாக்ஷியம் என்னிடத்தில் இல்லாததால், எனக்குக் குற்றவாளிகளென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லாத இரண்டு நண்பர்கள் மீது வாரண்டு பிறப்பு விக்கப்பட்டது.

என்னுடைய நடமாட்டங்களை ரகசியமாக வைத்துக்கொள்ளுவது சாத்தியமில்லை. நான் அநேகமாக நாள் தவறாமல் போலீஸ் கமிஷனரிடம் சென்று கொண்டிருந்தது பலருக்குத் தெரியும். வாரண்டு பிறப்புவிக்கப்பட்ட இரண்டு உத்தியோகஸ்தர்களும் தேர்ந்த துப்பர்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னுடைய காரியாலயத்தை அடிக்கடி சுற்றிப் பார்த்து, நான் என்னென்ன செய்கிறேனென்பதை அவர்களுக்குத் தெரிவித்துகொண்டிருந்தார்கள். இருந்தாலும் இந்த இரண்டு பேர்களும் அதிகத் துப்பர்களையும் அவர்கள் வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இந்தியர்களும் சீனக்காரர்களும் எனக்கு உதவி செய்திராவிடில் அவர்களைக் கைதுசெய்திருக்கவே சாத்தியப்பட்டிருக்கப் போவதில்லை.

இவர்களில் ஒருவர் ஓடி ஒளிந்து கொண்டுவிட்டார். போலீஸ் கமிஷனர் அவரை இதர இடங்களிலிருந்தும் கைது செய்துகொண்டுவர வாரண்டு பெற்று அவரைக் கைதுசெய்து டிரான்ஸ்வாலுக்குக் கொண்டுவந்து சேர்த்தார். அவர்களுடைய வழக்கு விசாரணை செய்யப்பட்டது. அவர்கள் மீது பலமான சாக்ஷியமிருந்தும், அவர்களில் ஒருவர் ஓடி ஒளிந்துகொண்டு விட்டதற்கு ஜூரிகள் முன்பாக சாக்ஷியமிருந்தும், அவர்கள் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகள் அபிப்பிராயப்பட்டு அவர்களை விடுதலை செய்துவிட்டார்கள்.

எனக்கு மிகுந்த ஏமாற்றமேற்பட்டது. போலீஸ் கமிஷனரும் மிகவும் வருத்தப்பட்டார். நியாயவாதித் தொழிலில் எனக்கு அருவருப்பு ஏற்பட்டுவிட்டது. சட்டப் பரீட்சைக்குப் படிப்பது குற்றங்களை மறைப்பதற்கு உதவியாக விருந்ததால் அந்தப் படிப்பிலேயே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது.

இருந்தாலும் இவ்விருவரும் கமுத்தளவு குற்றவாளிகளானதால் கோர்ட்டில் அவர்கள் விடுதலையடைந்திருந்தபோதிலும் கவர்ன்மெண்டார் அவர்களை வேலையில் வைத்துக்கொள்ள முடியவில்லை. அவர்களிருவரும் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஆசியாக்காரர் இலாகா இதனால் சிறிதளவு பரிசுத்தமடைந்தது. சிறிய சமூகத்தினருக்குச் சிறிதளவு ஆறுதல் ஏற்பட்டது.

இந்த வழக்கிலிருந்து என்னுடைய கௌரவம் உயர்ந்தது, அதிகக் கேஸ்கள் எனக்குக் கிடைத்தன. சிறிய சமூகத்தார் விரயம் செய்துவந்த நூற்றுக்கணக்கான பவுன்களில் பெரும்பாகம் மிச்சப்பட்டது. அயோக்கியர்கள் சிலரும் இருந்துகொண்டிருந்தால் முழுப்பணமும் மிச்சப்படவில்லை. ஆனால் யோக்கியர்கள் யோக்கியப் பொறுப்புடன் நடந்துகொள்வதற்கு இடமேற்பட்டது.

### அஹிம்ஸா தர்ம தத்துவம்

இந்த உத்தியோகஸ்தர்கள் கெட்டவர்களாக இருந்தபோதிலும் அவர்களுடைய பேரில் முகதாவில் எனக்கு எவ்வித வருத்தமுமில்லை. இது அவர்களுக்கே தெரியும். அவர்களுடைய கஷ்ட தசையில் என்னுடைய உதவியை நாடியபோது என்னாலியன்ற உதவியைச் செய்தேன். நான் ஆட்சேபிக்காதவரையில் ஜோன்ஸ் பர்க் முனிஸிபாலிட்டியில் அவர்களுக்கு வேலை அகப்படுவதாக இருந்தது. அவர்களுடைய நண்பர் ஒருவர் என்னை வந்து பார்த்தார். நான்வழி மறிப்பதில்லையென்று சொன்னேன். அவர்களுக்கு அந்த வேலையும் கிடைத்தது.

இவ்வித மனோபாவத்தை நான் காட்டியதிலிருந்து நான் பழகவேண்டி வந்த உத்தியோகஸ்தர்கள் என்னிடம் சமரஸமாக விருந்தார்கள். அவர்களுடைய இலாகாக்களுடன் நான் போராடி, கடுமையாகக் கண்டித்தபோதிலும் அவர்கள் என்னுடன் சிநேகபாவமாகவே இருந்துவந்தனர். இவ்விதம் நடந்துகொள்ளுவது இயற்கையாக எனக்கு ஏற்பட்டுள்ள சுபாவமென்பது எனக்கு அப்பொழுது தெரியாது. பிறகுதான் ஸத்தியாக்கிரகத்திலும் இது ஒரு முக்கிய அம்சமென்பதை நான் கண்டுகொண்டேன்.

மனிதர்களும் அவர்களுடைய செய்கைகளும் வெவ்வேறு விஷயங்கள். நல்ல காரியங்களைச் சிலாகித்தும், கெட்ட காரியங்களைக் கண்டித்தும் வரவேண்டுமாயினும், அந்தக் காரியத்தைச் செய்பவரிடம் அவருடைய செய்கைக்குத் தகுந்தபடி மரியாதையோ, வருத்தமோ தெரிவித்துக் கொள்ளவேண்டும். "பாவத்தை வெறு; பாவம் செய்பவரை வெறுக்காதே" என்னும் தர்மத்தின் விசேஷத்தை உணர்ந்து கொள்ளுவது சுலபமானதாக இருந்தபோதிலும், ஜனங்கள் அதன்படி நடப்பதில்லை. ஆகையால் தான் துவேஷமாகிய விஷம் உலகில் பரவிவருகிறது.

ஸத்திய தரிசனத்தை விரும்புவோர் இந்த அடிப்படையான தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். அஹிம்ஸா தர்மத்தை அஸ்திவாரமாக வைத்துக் கொள்ளாவிடில் ஸத்ய தரிசனம் அசாத்தியமானதென்பது எனக்கு வரவர ருஜுவாகி வருகிறது. ஒரு முறையை எதிர்ப்பது நியாயம்; ஆனால் அதன் கர்த்தாவை எதிர்ப்பது தன்னையே எதிர்த்துக்கொள்ளுவதற் கொப்பாகும். ஒரே மண்ணால்தான் நம்மை செய்திருக்கிறார்கள். நம்மைச் சிருஷ்டித்தவர் ஒருவரே. தெய்வீக சக்திதானிருக்கிறது. எந்த மனிதரையும் அலக்ஷியம் செய்வது, தன்னையும், உலகத்தையும் கெடுத்துக் கொள்ளுவதாகும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

[2-பக்கத்தின் தொடர்பு.]

மறுபடியும் சட்டசபைக்கு ஜெயித்து வந்தால் அவர்களே ஆட்சி புரியலாம். ஆட்சேபனை ஒன்றுமில்லை. அது முடியாத பட்சத்தில் மற்றவர்கள் ஆட்சி புரியவேண்டும். தாம் வாழவேண்டும் அல்லது பிறராவது வாழவேண்டும். இதென்ன முறை? அவர்கள் சொல் வேறு; செயல் வேறு என்று கண்டு உலகமெல்லாம் அவர்களைப் பார்த்து கைகொட்டிக் கொண்டிருப்பதை அவர்கள் காணமுடியவில்லை போலும். "பிறர் பார்ப்பதுபோல் தாமே நம்மைப் பார்க்கும் கண் கொடுக்கும் தெய்வம் ஒன்றில்லையா?"

சுயராஜ்யக் கொடிப்பிடாரி வந்துவிட்டது. ஆனால் பிடாரி அதை ஒப்புக்கொள்ளுமா? இந்தியன் டெய்லி மெயில் என்ற ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது "அரசியல் காரியங்கள் சித்திப்பதற்கு முட்டுக்கட்டை போடும் உபாயமெல்லாம் வீணென்று கண்டு சுயராஜ்யக் கட்சியார் இப்போது அரசியல் கட்சியாரோடு ஒத்த நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் தீர்மானத்தின் மூன்றாவது விதியின் 1-வது அங்கத்தின் 2-வது பிரிவை மாத்திரம் தள்ளுபடி செய்து ஏனைய மந்திரிமாரை இன்று ஆதரிக்கிறார்கள். அடுத்த சமயம் மூன்றாம் பிரிவையும் தள்ளுபடிசெய்து உத்தியோகத்தையும் பெறுவார்கள். இதை இப்படி வெளியாகச் சொல்வதிலிருந்து ஒருக்கால் சுயராஜ்யக் கட்சியார் தங்கள் முகம் சுருக்காயிருப்பதற்காக முரண்டினும் முரண்டுவார். தானாகவே போகிற குதிரையை சவுக்காலடிக்கிறது முறையா?" என்கிறது. இது எவ்வளவு உண்மை பாருங்கள்?

சுயராஜ்யக் கட்சியார் சொல்வேறு செயல்வேறு என்று இருக்கிற நிலைமையில் தேசத்துக்கு பெருங்கேடு தான். மானமற்றதே அவர்கள் வாழ்வு. அவர்களும் அவர்களைச் சேர்ந்த பத்திரிகைகளும் நமது மாகாணத்தைப் பற்றியுள்ள விஷயங்களில் இப்பொழுது வாயே திறக்கிறதில்லை. மாகாணக் காரியங்கள் அவர்கள் கௌரவத்துக்குப் பொருந்தாது போலும். அவர்களுடைய கவனங்களுக்கு இலக்காயிருப்பது அகில இந்திய விஷயங்கள்தான். அன்னிய தேச ஆட்சியிலதான் இப்போது அவர்களுக்குக் கவலை. சென்னைமாகாணத்து மந்திரிகள் செய்யும் செயல் அவர்களுக்கு ஒரு விஷயமல்ல. முன்னமே கர்ச்சித்துக் கொண்டிருந்த சிங்கங்கள் இப்போது கையிலிருந்து கொஞ்சும் கிளிகளாய் விட்டன. முன்னர் ஜனசமுதாயத்துக்குக் குலதெய்வம்; இப்போது அதிகார வர்க்கத்தினருக்கு அடிமை.

அக்காலத்தில் ஜஸ்டிஸ் மந்திரிகளைப்பற்றிக் கத்திய கதையெல்லாம் காற்றாய்ப் பறந்து போய்விட்டது. இப்போதுள்ள மந்திரிகள் புரிகிற அரும் ஆட்சி மனிதர் இருந்து செய்யும் ஆட்சியல்ல. பூதகணம் செய்யும் ஆட்சியாகத் தானிருக்கிறது. ஸ்தல ஆட்சி ஸ்தாபனங்களுக்குரிய சில உரிமைகளைக் கூட காலின் கீழ் வைத்து தேய்த்தொழிக்கப் பார்க்கிறார்கள். ஸ்தல ஆட்சிச் சங்கங்கள் ஒரு மனதாய் ஏகோபித்துச் செய்யும் தீர்மானங்களை நிராகரித்து மனம் போன போக்கெல்லாம் பைசாசத் தாண்டவம் ஆடுகிறார்கள். இவர் பிறப்பிக்கிற உத்தரவுகளைப்போல் சுதேசத்தைப் பாழாக்குகிறது வேறு எதுவும் இல்லை. ஜஸ்டிஸ் மந்திரிகள் இத்தகைய உத்தரவுகள் எக்காலத்திலாவது பிறப்பித்தது உண்டோ? இடையே அதற்கு முன்னிருந்த வெள்ளையரேனும் பிறப்பித்ததுண்டா? அதுவுமில்லை. ஜனங்களிடமிருந்து குட்டிபோட்டு வாங்குகிற வரியைக் கொண்டு சென்னை உத்தியோகப் படைகளின் நீலகிரிவாசம் மாசக்கணக்கில் நடப்பதற்குக் காரணம் ஒன்றுமின்றி இந்த ஆண்டில் கூட ஒரு மாசம் பெருக்கிவிட்டார்கள். அவர்கள் தே... போதும். துரைத்தனம் ...க்கு எப்பொழுதும் பொ...

...துரைத்தனத்தின் பெயரால் எத்தனையோ வித அக்கிரமங்கள் செய்து வருகிறார்கள். இக்கொடுமைகளை எல்லாம் சுயராஜ்யகட்சியாரும் அவர்களுடைய பத்திரிகைகளும் கண்டித்து ஒருவார்த்தைகூடச் சொல்லுகிறதில்லை. உறங்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தக் கும்பகர்ணர்கள் எவ்வளவு காலம் உறங்குவார்களோ சொல்ல முடியாது. யுகாந்த முடிவுவரை உறங்கும்படி கடவுள் கருணை செய்வாராக.

இப்போது அவர்களுக்கு ஒன்றும் பேசமுடியாமல் தலை கவிழும்படி ஆகிவிட்டது. அவர்கள் வெறும் பொம்மைகளை உத்தியோகத்தில் வைத்து தங்கள் மனோசர்மத்துக்கிசைய ஆட்டுகிறார்கள். ஜஸ்டிஸ் மந்திரிவர்க்கமாகிய பெரும்பூதம் வந்துவிடுமோ என்று பயந்த வண்ணமாயிருக்கிறார்கள். அந்தப் பெரும் பூதத்துக்குப் பயந்துதான் இப்போது நடக்கிற பொம்மைப்பாட்டம் கொஞ்சமும் கலைந்துவிடக்கூடாது என்று எண்ணுகிறார்கள். நம் தேசத்து உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் காப்பாளர்களென்று வீரிட்ட இவர்கள் இப்போது எவ்வாறு இருக்கின்றார்கள்? பாருங்கள்! வீட்டிலுள்ள அடிமைத்தனத்தை விட்டுவிட்டு வேறெங்கேயோ விருக்கிற அடிமைத்தனம் நீங்குவதற்காக கொட்டாவிவிட ஆரம்பித்துவிட்டார்கள். ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள மக்களுக்காகப் பொய்யாக வடிக்கும் கண்ணீரைக் கொண்டு வீட்டிற் செய்கிற அக்கிரமத்தை மெழுகிவிடப் பார்க்கிறார்கள். நாட்டு நன்மையைக் கோருவதே முதற்காரியம். பிறகல்லவா உலக நன்மைக்குக் கண்ணீர்வடிக்க வேண்டும்?

## எத்தகையர் நாம்?

சென்ற தேர்தலில் வந்த ஜஸ்டிஸ் கட்சியார் எண்ணிக்கையில் குறைந்தவர்தான். ஆனால், அது ஒரு தோல்வியா?

ஜஸ்டிஸ் மந்திரிமார் ஆறுவருஷ காலம் தோல்வியென்பதே இன்னதென்றறியாமல் ஆட்சிபுரிந்து வந்தனர். ஆட்டிவைப்போர் பின்னிருந்து ஆட்ட அவர்கள் ஆடவில்லை. பொம்மை ஆட்சியல்ல அவர்கள். நம் நாட்டுக்கு அவர்கள் செய்த அரும் செயல்களைப்பற்றி சரியானபடி கணிக்க இப்போது உள்ளவர்களுக்கு முடியாது. இனிவரும் சரித்திரக்காரரால் தான் நன்கு கணித்து எழுதப்படும். இந்தியாதேசத்திலே நம்முடைய மந்திரிகள் மாதிரி வேறு எந்த மந்திரிகளும் பயன்பட்ட ஆட்சி புரியவில்லையென்றும் அவர்களே மந்திரி வர்க்கத்தில் ஒப்புயர்வற்றவர்கள் என்றும் பாரபட்சமில்லாதவர்கள் இப்போதே சொல்லுகிறார்கள்.

நம்மவர்கள் ஆறு வருஷம் இடைவிடாத் தோல்வி ஒன்றுகூட அறியாமல் ஆட்சிபுரிந்து வந்தார்கள் என்பதை விட நம்பிக்கைக்கு வேறு சான்று வேண்டுமோ? அத்தனை நீண்ட காலம் பதவியிலிருந்து விட்டு நீங்குகிறதினால் அது பிறப்பிலுள்ள குறையென்று கொள்ளலாமா? நூறு வயது இருந்து முதிர்ந்து இறந்த ஒருவர்க்கு ஜாதகத்தில் ஆயுள் பலமில்லை என்று சொல்லலாமா? சர்மத்தால் அற்ப ஆயுசு என்று சொன்னால் சிரிக்கவேண்டியதைத் தவிர்த்து வேறென்ன? அது மறுபிறவிக்கேற்ற இயற்கை நிகழ்ச்சியே. அரசியல் விஷயங்கள் மாறி மாறிப் புரண்டு செல்லும் முறையில் ஆறுவருஷங்கழித்து முடிவு வருகிறது எவ்விதத்திலும் இயற்கைக்கு மாறானதன்று.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்றார் ஆன்றோரும். இனி நாம் செய்யவேண்டிய யுத்தங்களுக்குத் தக்கவாறு சைனிய பலம் தயாரித்துக் கொள்ளத்தான் இப்போது உத்தியோகத்தை விட்டு ... சட்டசபைத் தேர்தலின் பழைய...

...வத்தின் வலிமை இன்னதென்றும் உலகத்தாருக்கு நன்கு தெரிய வந்திருக்கிறது.

சட்டசபை இப்போது எப்படி ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சற்று நோக்குங்கள். நம்முடைய மந்திரிகளுக்குப் பின்னாக இப்போது வந்திருக்கிற மந்திரிகளைத் தான் பாருங்கள். நம்முடைய இயக்கத்துக்கு ஜீவசத்துவம் எவ்வளவு இருக்கிறதென்பது உடனே தெளிவாகும். சுயராஜ்யத் தலைவர்கள் பார்ப்பனர்கள் தான். அதினால என்ன? வேப்பங்காயைத் தின்கிறது போல முகத்தைச் சுழித்தாலும் பார்ப்பனர் அல்லாரையே தேர்தலில் அபேக்ஷகராக குறிப்பிடும்படி ஏற்பட்டுவிட்டது. அதிகமாக பார்ப்பன அபேக்ஷகர்களைக் குறிப்பிட்டிருந்தால் அவர்களுக்குத் தோல்விதான். சட்டசபையில இப்போது பார்ப்பனரல்லாரே தொகையில் மிகுந்து முழுமூரமாயிருக்கிறார்கள். இப்போதுள்ள மந்திரிகளைப் பதவியில் வைத்தது ஐரோப்பிய பார்ப்பனரும் இந்தியப் பார்ப்பனருமே. இருந்தாலும் அம்மந்திரிமாரவரில் பார்ப்பன அம்சம் கொஞ்சமும் கலக்க அவர்களுக்கு தைரியம் இல்லை. நம்முடைய இயக்கத்துக்கு இதுதான் வெற்றி. இதைவிட வெற்றி வேறென்ன இருக்கிறது?

பார்ப்பனரல்லாதார் கட்சி பழைய வீரியத்தோடு இருந்தபோதிலும் நம்மவருக்கு அதனிடத்துள்ள மோகம் ஒருவாறு சிறிது குறைய நேர்ந்தது. ஆறு வருஷம் ஒரே போக்காய் அதிகாரத்திலிருந்த நாம் யாதொரு பயமுமில்லை யென்று மயங்கி எதிரிகள் நமக்கு விரோதமாய்ச் செய்து கொண்டு வந்த கபடச்செயல்களை கவனியாது உறங்கிவிட்டோம். நம்முடைய இயக்கம் எவ்வளவு நியாயமாயிருக்கிறது என்று எண்ணி நம் தலைக்கு மேல் வருகிற ஆபத்தை எதிர்பாராமலே இருந்து விட்டோம். அது காரணமாக நம்முடைய கட்சியின் முயற்சி கொஞ்சம் தளர்ந்துவிட்டது. நம்முடைய தளர்ச்சியைப் பார்த்து எதிரிகள் விழித்துக் கொண்டார்கள். உடனே நம்மை மூலவறு செய்வதற்கும் நம்மைப் பற்றி இல்லாததைச் சொல்லவும் கிளம்பிவிட்டார்கள். ஓட்டுகளை (வாக்குரிமைகளை)க் கைப்பற்ற சூதாடியின் சொற்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். ஓட்டுகளைப்பிடிப்பதற்கு மயிலாப்பூர் அக்கிரகாரத்தில் உண்டுபண்ணின பொறிகளுக்குக் கணக்கில்லை. இச்சப் பொறிகளிற் சிக்கித் திண்டாடினவரில் நம்மவர் எத்தனையோ பேர். உலகத்திலுள்ள கேடுகளுக்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாரும் அவர்கள் மந்திரிகளும் தான் காரணம் என்றார்கள். மழையில்லாமல் பயிர் வாடினால் ஜஸ்டிஸ் கட்சியார் செய்த பாவத்தினால் தான் என்பார்கள். ஒரு கிராம அதிகாரியின் அக்கிரமத்துக்கு ஜஸ்டிஸ் மந்திரிகள்தான் பழி என்பார்கள். கிராம நிர்வாகத்தில் ஏதாவது தவறு இருந்தால் நம்மவர் ஆட்சியால் தான் வந்தது என்பார்கள். ஜனங்களில் சிறிது விபரம் தெரிந்தவர்களுக்குக் கூட இருந்தே ஆட்சி இன்னதென்று தெரியாமல் துரைத்தனத்தில் மந்திரிமாருக்கு என்ன பொறுப்பென்றும், மற்றவர்களுக்கு என்ன பொறுப்பென்றும் விளங்கவில்லை. மந்திரிகளுக்குச் சம்பந்தமில்லாத துரைத்தனப்பகுதி செய்த தப்பிதங்களுக்கு மந்திரிமார்களையே வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். இந்தப் பொய்யும் புரட்டும் பரவிக் கொண்டிருக்கும் பொழுது நாம் இதைத்தடுக்க ஒன்றும் செய்யாது வாளாஇருந்துவிட்டோம். நம் மந்திரிமார் செய்த நன்மை எல்லாம் குடத்துக்குள் வைத்த விளக்காய் விட்டன. இந்த அக்கிரமப் போரில் பொய் வென்றது; மெய் தோற்றுப்போய் விட்டது. அதன் பயனாய் மந்திரி வர்க்கத்தையே தொலைத்துவிடுமோ மென்பாலரையும் சிறிது விட்டுப் பார்ப்போமே என்ற உணர்ச்சி...

தேர்தலில் நேர்ந்த தோல்வி உண்மையில் நமக்குக் கிட்டாத பெரும் பேறு.

சட்டசபையில் நாம் தான் ஒரு கட்சி. துரைத்தனத்தை எதிர்ப்பவர்களும் நாம் ஒருவரே. சுயேச்சையாளிகள் தேர்தல் முடிந்தபின் ஓர் இரவில் உண்டாகி ஓர் பகலில் பட்டுவிடும் காளான்கள் போல் உண்டானவர்கள். அவர்கள் ஒரு கட்சியேயில்லை. உலகத்தில் இல்லாதபடி ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதென்று சொல்லிப் பெருமை பாராட்டிவந்த சுயராஜ்யக் கட்சியைப் பார்த்தாலோ அது ஒரு விந்தை. அதில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்களோ அத்தனை கட்சிகள் கிடைக்கின்றன. இப்படிச் சிதைந்து போனபின் அதுவும் ஒரு கட்சியா? ஜஸ்டிஸ் கட்சியார் ஒழுங்குக்கும் கோட்பாட்டுக்கும் அடங்கி ஒரு கட்சியாக நிலவுகின்றனர். நம்முடைய பகையாளிகளான வைரிகள் கூட உண்மையை அங்கீகரிக்கிறார்கள். சட்டசபையில் அதிகார வர்க்கத்தினருக்கு தடையாளிகளாக இருக்கிற நிலைமையில் அரசியல் துறையில் நமக்கு நல்ல பயிற்சி இப்போது ஏற்பட்டுவருகிறது. அரசியல் தத்துவத்தில் முன்னேற்றமடைய வேண்டுமானால் தடையாளிகள் ஜாக்கிரதையாகவும் இளக்காரம் காட்டாமலும் ஒரேபடியாய் எதிர்த்து வரல் வேண்டும். நாம் எண்ணில் குறைந்திருப்பதினால் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. மகாத்மா காந்தியடிகள் "கொடிய பாலைவனம் போல் காட்டி உண்மையில் கற்பகவனமாயுள்ள சிறுபான்மையாரின் சார்பில்தான் எனது பெரும் பணிகள் எல்லாம் இயற்றப்பட்டன. நான் அஞ்சுவது மதியை மயக்கும் பெருங்கூட்டத்தின் சார்பே." என்கிறார். இந்த மகானைப்பற்றி நாமும் எண்ணத்தில் குறைந்த நம்மவர் சார்பிலேயே உறுதியாகத் தக்க பணிகளைச் செய்து முடிப்போமாக.

சட்டசபை தேர்தலுக்குப்பிறகு தேசத்திலேயே ஒரு புதுக்கிளர்ச்சி பிறந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் பார்ப்பனரல்லாதார் ஆவேசத்தோடு அரசியல் காரியாதிகளில் ஊக்கம் காட்டி வருகிறார்கள். தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஆகவும் மதுரை மகாநாடு மதுரையில் கூடியது. அதில் ஜனங்களுக்கிருந்த உற்சாகமும் நம் தலைவர்களுக்கு காட்டிய அன்பும் ஆதரவும் உத்தியோகத்தில் இருந்தபோது கூட நாம் கண்டதில்லை. விளம்பரம் செய்யப் போதுமான காலங்கூடவில்லை. இருந்தாலும் ஒரு கொடியில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடினார்கள். அதி மாதிரி கூட்டமும் குதூகலமும் நாம் பார்த்ததில்லை. பார்ப்பன நாட்டின் நன்னடுவே சமீபத்தில் நடந்த தஞ்சை ஜில்லா மகாநாடும் நம்மவருக்கு நம் கட்சியில் உள்ள ஆர்வத்தை நன்கெடுத்துக்காட்டி விளக்கியது.

சட்டசபை கலைந்து வேறு தேர்தல் ஏற்பட்டுவிடுமோ என்று சுயராஜ்யக் கட்சியார் நடுங்கும் நடுக்கமும் தேசத்தில் நமக்குள்ள பலத்துக்கோர் சிறந்த அத்தாட்சியே.

இந்த ஊக்கத்தை பிரசாரகத் தொழில் செய்து நம் தலைவர்கள் வளர்த்து வரவேண்டியது அவசியம். புதுப் பணிகள் ஒன்றின் பின் ஒன்றாக ஆரம்பித்து அவை இயற்றுவதில் நம்மவர்களுடைய ஊக்கம் வளர்ந்துகொண்டு வரவேண்டும். வேலையில்லாமல் அவ்வூக்கம் தருவேற விட்டுவிடலாகாது.

[தொடரும்.]

---

ஆத்திரப் புத்தியினர்
தவறித் துயர வாரிதியில்
வீழ்வர்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection